பக்கங்கள்-16 22.தை.2023 விலை–50.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0774357193

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –399

## ஊடகவியலாளர் சிவராம் கொலையுடன் தொடர்புடைய DT.N.A கட்சியின் செயலாளர் RR




## தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவடையவில்லை – மாவை



## ரணிலின் இராஜதந்திரமும், உள்ளூராட்சிமன்றத் தேர்தலும்




## ஜெனீவா தீர்மானங்கள் தமிழ் மக்களுக்கான தீர்வாக அமையப்பெறுமா?

# ஊடகவியலாளர் சிவராமின் கொலையில் தொடர்புடைய கட்சியே DT.N.A

**ஓய்வுபெற்ற முன்னாள் நீதியரசரும், முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்**

**கேள்வி : இன்றைய காலகட்டத்தில் பொருளாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் பொழுது எப்படி உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்தி முடிக்க முடியும் அல்லது இவ்வாறான ஒரு சூழலிலே இந்த அறிவிப்பை அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. அது தொடர்பாக உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : தற்போதைய நிலைமை உள்ளூ ராட்சி தேர்தலை நடத்த அவர்கள் தொடங்கிய பொழுது அந்த நிலைமை இருக்கவில்லை. ஒரு வித்தியாசமான நிலைமை தான் இருந்தது. நான் நினைக்கின்றேன் இதை ஆரம்பித்து வைத்தவர் பசில் ராஜபக்ச தான். ஆகவே தற்பொழுது பல நிலைமை மாறியதன் பிற்பாடு ஓரளவிற்கு நாட்டில் சட்ட ஒழுங்குகள் கொஞ்சம் ஏற்படுத்தப்பட்டு முன்னர் இருந்த அந்த நிலைமை கொஞ்சம் அடங்கியிருக்கின்றது. இந்த நிலையிலே எங்களது பொருளாதார பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்கின்ற விதத்தில் நாங்கள் ஒரு தேர்தலை கொண்டு வந்தால் அது கட்டாயமாக நாட்டிற்குள் பிளவுகளையும் பிரச்சனைகளையும் ஏற்படுத்தும். என்னைப்பொருத்தவைரயிலே இந்த தேர்தல் அவசியமற்றது. ஏனென்றால் அது ஜனநாயக ரீதியாக வைக்க வேண்டும் என்றெல்லாம் பலர் கூறிக்கொண்டிருக்கின்றார்கள்.



நாட்டினுடைய நிலைமை அப்படியிருக்கின்றது அதாவது நீங்கள் ஜனநாயகத்தைப் பற்றி பேசுகின்றீர்கள் நாடு வங்குரோத்து நிலைமைக்கு வந்திருக்கின்றது. நாடு வங்குரோத்து நிலையில் இருக்கும் பொழுது ஜனநாயகத்தைப் பற்றி யோசிக்க முடியாது நாட்டை வீழ்ச்சியிலிருந்து மேலே எழுப்பக்கூடிய நிலைமையை நாங்கள் ஏற்படுத்த வேண்டும். அதைத்தான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் செய்துகொண்டிருக்கின்றார். இந்த நிலையில் தேர்தல் தேவையில்லை என்பது என்னுடைய கருத்து. ஆனால் தேர்தலுக்கு நாங்கள் எல்லா நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும் என்பது எங்களது கடமை. இந்த தேர்தல் நடைபெற்றால் அரசாங்கத்திற்கு ஒரு பிரச்சனை ஏற்படும் என நான் நினைக்கின்றேன். ஏனென்றால் தேர்தலினுடைய மக்களினுடைய தேர்வு பெரும்பான்மையாக எவரையுமே ஏற்படுத்தாது தொங்குபாரணம் என்று கூறுவார்கள். அதில் நிச்சயமான பெறுபேறுகளை நாங்கள் பார்க்கமுடியாது போய்விடும். அந்த நிலைமையில் இதை நாங்கள் எடுப்பதால் நாட்டுக்கு மேலும் மேலும் பிரச்சனைகள் தான் ஏற்படுமே தவிர ஒரு சுமூகமான உள்ளூராட்சி நிர்வாகம் நடைபெறுவதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பது தான் என்னுடைய கருத்து. ஆகவே இதற்கு காரணம் ஏற்கனவே இது கொண்டுவரப்பட்டு அதை எப்படியாவது கொண்டு நடத்த வேண்டும் என்றவொரு எண்ணத்திலே இருக்கின்றார். தான் ஒரு ஜனநாயக முறையிலே அதனை கொண்டுவருவதாக கூறிக்கொண்டு மிகவும் மும்முரமாக இருக்கின்றார். ஆனால் அரசாங்கத்திற்கு இது எப்படியாவது நடைபெறாமல் தடுக்க வேண்டும் என்ற எண்ணமும் இருக்கின்றது. இந்த நிலையில் நாங்கள் எங்கிருக்கின்றோம் என்பது எங்களுக்கு தெரியாத நிலையில் அதற்கு ஆயத்தமாகி வருகின்றோம்.

**கேள்வி : இந்த வகையில் தற்போதைய சூழ்நிலையிலே ஆயிரத்து நூறு கோடிக்கு மேல் இதற்கு செலவீனம் இருக்கின்றது என்று கூறுகின்றார்கள். அதை விட போட்டியாளர்களை பார்க்கின்ற பொழுது கிட்டத்தட்ட நான் நினைக்கின்றேன் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் இருக்கின்றார்கள். அதிலே 234 பேரை மட்டும் தான் தெரிவு செய்திருக்கின்றார்கள். இப்படியாக இருக்க இதனுடைய செலவீனங்கள் எல்லாம் நாட்டினுடைய பொருளாதாரத்தை மிகவும் ஒரு அதாள பாதாளத்திற்குள் கொண்டுசெல்லப்படுகின்ற நிலைமை இருக்கின்றதல்லவா?**

பதில் : இந்த செலவு ஒரு பெரிய செலவல்ல. அது சிறய செலவு என்பது போன்று பேசிக்கொண்டிருக்கின்றார்கள். எதுவாக இருந்தாலும் இந்த செலவு தற்போதைய நிலையிலே தேவையற்றது என்பது என்னுடைய கருத்து. ஒரு வருட காலத்திற்கு தேர்தல்களை நிறுத்தி வைத்து எங்களது பொருளாதார நிலையை மேம்படுத்தி உயர்ச்சியடைய செய்து அதன் பின்னர் தேர்தல்களை நடத்துவது தான் முறை என்று நினைக்கின்றேன். தற்போதைய ஜனாதிபதி ஏதோ மக்களினுடைய ஆணையை பெறாது வந்திருக்கின்றார் அப்படியெல்லாம் ஒவ்வொரு விதமான கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. அவர் அரசியல் யாப்பினுடைய சரத்துகளுக்கு அமைய தான் அவர் இந்த நிலைக்கு வந்திருக்கின்றார். ஆகவே மக்கள் இல்லையென்றாலும் மக்களினுடைய பிரதிநிதிகள் அவரை இந்த நிலைக்கு நியமித்திருக்கின்றார்கள். தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள்.

மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் தற்பொழுது மக்களினுடைய ஆதரவை செய்யாது விட்டார்கள் என்று சிலபேர் கதைத்தாலும் அடுத்த தேர்தலிலே ஒருவரை நியமிக்கும் வரையில் அவர் தன்னுடைய மக்களின் பிரதிநிதியாகத்தான் இருப்பார். ஆகவே அவ்வாறான பிரதிநிதிகள் 225 பெரும்பான்மையானோர் அவரை நியமித்திருக்கின்றார்கள். அந்த நியமனத்தின்படி அவர் ஜனாதிபதியாக இருக்கின்றார். எனவே அவர் பொருளாதார ரீதியாக நாட்டை மேம்படுத்த பல விதங்களிலும் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கின்றார். இன்றைய பாராளுமன்றத்திலே இவ்வாறான பொருளாதார நிலைமையை முகம்கொடுக்க சீர்செய்யவல்ல ஒருவர் என்றால் அது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தான் ஏனையோர்களால் அதை செய்யமுடியாது. எனவே அவ்வாறான ஒருவரை மக்களால் 2020 தேர்தலிலே தேர்ந்தெடுக்கவில்லை என்பது தேவையற்ற விடயம். தற்பொழுது இந்த விடயத்தை செய்யக்கூடியவர் என்ற முறையிலே அவருக்கு பாரம் கொடுத்திருக்கின்றார்கள் அவரை நாட்டின் நலன் கருதி அதை செய்ய விட வேண்டும் என்பது எனது கருத்து.

**கேள்வி : இதில் மிக முக்கியமான விடயமாக நீங்கள் ஒரு தமிழரசுக் கட்சியினூடாக மாகாணசபைக்கு தெரிவு செய்யப்பட்டவர் அந்தடிப்படையில் பார்க்கும் பொழுது அதன் பின்னர் இந்த கட்சிகளிற்குள்ளே ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக மாகாணசபையின் பின்னர் நீங்கள் உங்களது தனி வழியிலே கட்சிகளை ஆரம்பித்து அதன் பின்னர் உங்களது அரசியல் பயணத்தை மேற்கொள்ளுகின்றீர்கள். இந்த நேரத்திலே அப்பொழுது நீங்கள் ரணிலுடன் இணைகின்றபொழுது ஈ.பி.ஆர். எல்.எப், ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் அதே கூட்டுக்கட்சியில் TNA என்ற கட்சியில் இருந்தது. தமிழ்தேசியமக்கள்முன்னணி, தமிழர் விடுதலைக்கூட்டணி அதிலே இருக்கவில்லை. ஆனால் அத்தனையும் இணைந்தது தான் தமிழ் தேசிய கூட்டமைப்பாக இருந்தது. எனவே இவ்வாறான கட்டத்திலே நீங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து பயணிக்க அந்த பயணம் எப்படியான அனுபவத்தை தந்திருக்கின்றது?**

பதில் : அப்பொழுது எங்களது நடவடிக்கைகளில் நிலைநிற்பது என்பது அதை நடைபெறவிடாது வடமாகாண சபையிலே பலவிதமான பிரச்சனைகளையும் தடைகளையும் கொண்டு வந்தது தான் நாங்கள் கண்ட விடயம். பலர் அதற்கு காரணமாக இருந்திருக்கலாம். தங்களுக்கு அந்த பதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்தவர்கள் வெளியில் இருந்து வந்தவர் எனக்கு முன்னர் விடக்கூடாது என்ற சிந்தனையில் செய்திருக்கலாம். எப்படியும் தமிழ் தேசிய கூட்டமைப்பிலே ஒரு உயர்ந்த நிலைக்கு வருவதை தடுக்க வேண்டும் என்ற நிலையிலும் பலர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம். இவ்வாறு பலர் அதிலே கூட்டாக எங்களது நடவடிக்கைகளை தடுக்க முனைந்தார்கள். இதன் காரணத்தினால் அவர்களுடன் இருந்து பிரச்சனைகள் ஏற்படக்போகின்றது என்பதை விளங்கிக்கொண்டு தான் இருந்தேன். அப்பொழுது எனக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வருவதற்கு சபை முதல்வரே முன்நின்று அதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டார். கட்டாயமாக நான் அதிலே தோற்கப்போகின்றேன் என்ற அடிப்படையிலே அவர் சென்று அப்போதைய ஆளுநரிடம் அந்த ஆவனத்தை பாரப்படுத்தி நடவடிக்கையில் ஈடுபட்டார்.

ஆனால் என்னைப் பொருத்தவரையிலே ரெலோவில் இருந்த சிவாஜிலிங்கம் அவர்களும் வேறு சிலரும் எனக்காக மிகவும் முன்னணியில் நின்று அத்துடன் இளைஞர் கூட்டங்கள் ஒரு வேளை கஜேந்திரகுமாரினுடைய கட்சியாகவும் இருக்கலாம். அவர்கள் அனைவருமாக சேர்ந்து எங்களுக்கு ஆதரவு தந்ததால் அந்த நம்பிக்கையில்லா தீர்மானம் விடுபட்டுபோய்விட்டது. எனவே நான் முழுமையாக 5 வருடங்களும் பதவியில் இருந்தேன். அதன் பின்னர் தான் தமிழரசுக் கட்சியிலே செயற்பாடுகள் அனைவரையும் சேர்த்து அவர்களுடன் பேசி ஆராய்ந்து தீர்மானங்கள் எடுப்பதில்லை என கண்டறிந்ததன் பின்னர் நான் வெளியில் வந்து இன்னொரு கட்சியை தொடங்கி கொண்டு வந்தேன். தற்பொழுது நான் அவ்வாறு செய்வதாக சிலர் கூறுகின்றார்கள். அவ்வாறில்லை ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலே நான் சில நடவடிக்கைகளில் ஈடுபடும் பொழுது எந்தநேரமும் என்னுடைய கட்சியில் உள்ளவர்களுடன் பேசி நடவடிக்கைகள் எடுப்பது கஷ்டம் ஆனால் நான் எடுக்கும் நடவடிக்கைகள் சம்மந்தமாக அவர்களுக்கு தெரியப்படுத்துவேன். அப்படியில்லை நீங்கள் நேரத்தோடு இதையெல்லாம் எங்களுடன் கதைத்து தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிலர் நினைக்கின்றார்கள். அது சாத்தியமில்லாமல் போய்விட்டதால் தான் இவ்வாறான முறைப்பாடுகள் எனக்கு எதிராக எழுந்தன. ஆனால் தற்பொழுது அவர்களுக்கு நான் அதை நன்றாக விளக்கியிருக்கின்றேன். இப்பொழுது கட்சியிலே அந்தவிதமான பிரச்சனைகள் எதுவுமில்லை.

**கேள்வி : கசப்பான அனுபவத்துடன் தான் அதனை கடந்து வந்திருக்கின்றீர்கள் அல்லவா. இதில் பார்க்கின்ற பொழுது அடிக்கடி உங்களது செயற்பாடுகளை பலரும் அவதானித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு நீதியரசராக, முதலமைச்சராக தற்போதைய பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் நீங்கள் தொடர்ந்தும் பதவி மோகங்களுக்காக ஆசைப்பட்டுத்தான் தற்பொழுது இந்த கூட்டமைப்பு இணைவையும் உடைத்ததாக செய்தி தாள்களிலும் இணையத்தளங்களிலும் செய்தி வருகின்றன. இதன் உண்மைத்தன்மை தான் என்ன?**

பதில் : உண்மையிலே எல்லா கட்சிகளும் சேர்ந்து முகம்கொடுத்து ஒருநிலைப்படுத்தி அவர்கள் முன்னுக்கு போகவேண்டும் என்று வெளிப்படையாகவே கருத்தை கூறியவன் நான் ஆகவே தற்பொழுதும் அந்த கருத்தில் தான் இருக்கின்றேன். ஆனால் எங்களுடைய கூட்டு கையெழுத்திட உட்காரும் பொழுது சில நடவடிக்கைகள் அங்கே நடைபெற்றன. ஒன்று எங்களுக்கு தெரியாமலே அங்கு ஜனநாயகப் போராளிகள் என ஒரு அமைப்பிலிருந்து மூன்று தம்பிமார்களை கொண்டு வந்திருந்தார்கள். இவர்கள் எதற்காக இங்கே வந்திருக்கின்றார்கள் நாங்கள் ஐந்து பேரும் தானே கைச்சாத்திடப்போகின்றோம் என்று கூறியபொழுது இல்லை இவர்களும் எங்களுடன் சேர்வார்கள் என்று அவர்கள் சொல்லும் பொழுது இது எங்களுக்கு நேரத்துடனே சொல்லியிருக்கலாம் தானே என கேட்ட பொழுது அந்த கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை. சிறிகாந்தா அவர்களும் சிவாஜிலிங்கம் அவர்களும் தங்களுக்கும் தெரியாது என்று தான் சொன்னார்கள்.

எனவே எங்களுக்கு தெரியாமல் இந்த நடவடிக்கைகள் எடுக்கும் பொழுது ஒரு தலைவர் என என்னை ஏற்றுக்கொள்ளக்கூடிய அந்த சூழலிலே ஒரு தலைவருக்கு தெரியாமல் இவர்கள் இவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கின்றார்கள் என்றால் வருங்காலத்திலே எவ்வாறு நடக்கப்போகின்றது என்பதை என்னால் ஊகிக்கக்கூடியதாக இருந்தது இது ஒன்று. இரண்டாவது விடயம் ஒரு கட்சி என்று சொல்லி அவர்கள் கட்சியை கொண்டு வந்து திணிக்கப்பார்த்தார்கள் அந்த கட்சி 2008 இல் தொடங்கப்பட்டது அது புளொட்டினுடைய கட்சி அதில் சித்தார்த்தன் தலைவர் ஆர்ஆர் என்று மக்களால் பலவிதத்திலும் விமர்சிக்கப்படும் ஒருவரால் தான் அதனுடைய செயலாளராக ராகவன் என்பவர் இப்பொழுதும் இருக்கின்றார். அவர் பல கொலைகளுடன் எல்லாம் சம்பந்தப்பட்டவர் என எனக்கு பல இடங்களில் இருந்தும் தகவல்கள் வந்தது. இவ்வாறான ஒருவர் செயலாளராக இருப்பதாக இருந்தால் தற்பொழுது நடக்கவிருக்கும் உள்ளூராட்சிமன்ற தேர்தலின் போது அவர் தான் செயலாளர் என்ற முறையில் பல நடவடிக்கைகளில் ஈடுபடப்போகின்றார். அப்படிப்பட்ட ஒருவரை நாங்கள் செயலாளராக வைத்துக்கொண்டு செய்வது எந்தளவிற்கு எங்களுக்கு நன்மை பயக்கும் என்ற கேள்வி எழுந்தது. மூன்றாவதாக தமிழரசுக் கட்சி இதுவரை காலமும் தங்களுடைய கட்சியையும் கட்சியின் சின்னத்தையும் தான் முன்வைத்து அவர்களுடைய அந்த கூட்டை நடத்தினார்கள் என்றும் அதைப்போன்று என்னுடைய கட்சியையும் கட்சியின் சின்னத்தையும் போட்டுத்தான் நானும் அவர்களைப்போல் தங்களை வெளியே அனுப்பக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் என்று அதை தடுப்பதற்காக அவர்கள் இதை செய்வதாக கூறினார்கள்.

**தொடரும்...**

**நேர்காணல் : இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## தமிழ்த் தரப்பு விழிப்புடன் செயற்படவேண்டும் - இல்லையேல் ஆபத்து

இன்றைய சூழ்நிலையில் கட்சிகள் ஒவ்வொன்றும் தத்தமது கட்சிகளை வளர்த்துக் கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றார்களே தவிர தமிழ் மக்களின் பிரச்சினைகளில் தீர்வு காணவேண்டும் என்ற நோக்கிலே இவர்கள் செயற்படவில்லை. தேர்தல் அரசியல் என்ற ஒன்றிற்காகவே தற்பொழுது இருக்கின்ற கட்சிகள் ஒவ்வொன்றும் தமக்கான களப் பரீட்சையை உருவாக்கி வருகின்றார்கள்.

தேர்தல் அரசியல் என்பது காலத்துக்கு காலம் வேறுபட்ட அரசியலாக இருக்கின்றது. தமிழரசுக் கட்சியினுடைய நகர்வு என்பது ஆயுத கட்சிகளை பிரித்தாளும் தந்திரங்களைக் கொண்டதாக அமைந்திருப்பதாக பலரும் தமது கருத்துக்களை தெரிவித்திருந்தார்கள். எனவே உண்மையில் அது தமிழரசுக் கட்சியின் மீது தனியே குற்றங்களை சாட்டுவது என்பதல்ல. ஆனால் இதனோடு இணைந்து பிரதமர் ரணில் விக்ரமசிங்க இருந்த காலப்பகுதிகளிலே அதனை உடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துவிட்டார்.

குறிப்பாக 2004 ஆம் ஆண்டிலிருந்தே அவர் அதற்கான கட்டமைப்புக்களை உருவாக்கி TNA ஐ பிளவுபடுத்தியிருக்கின்றார் என்பது தான் உண்மையான விடயமாக இருக்கின்றது. TNA ஐ பொறுத்தவரையில் தற்பொழுது அதற்கு எதிரான DTNA என்ற ஒரு கட்டமைப்பு உருவாக்கப் பட்டிருக்கின்றது. ஆகவே இந்த DTNA என்பது வேறொரு கட்சியினுடைய சின் னத்தைப் பயன்படுத்தித்தான் தற்பொழுது உருவாக்கப்பட்டிருக்கின்றது. காலத்தின் தேவை கருதி சில நடவடிக்கைகளை செய்யவேண்டியிருப்பதால் தமிழ் மக்களின் வாக்குகள் எவ்வாறு கிடைக்கப்பெறுகின்றன என்பதை சூறையாடுகின்ற வகையிலே ஜனாதிபதி ரணில் அவர்கள் ஒரு குழப்பத்தை உருவாக்கியுள்ளார். இதனூடாகவே தனது கட்சியைப் பலப்படுத்துகின்ற நடவடிக்கையாக அவர் தற்பொழுது சில பிரச்சினைகளை இங்கு முடுக்கிவிட்டிருக்கின்றார்.

இதில் குறிப்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி பெரும் பலத்துடன் காணப்படுகின்றது. காரணம் ஏனைய கட்சிகள் தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்ற விடயங்களில் இருந்து தற்பொழுது ஒதுங்கி செயற்படுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு அவர்கள் மீது முன்வைக்கப்படுகின்றது.

ஆகவே தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்திருந்த தமிழரசுக் கட்சியும் தனக்கான ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியாது திசைமாறிப் போயிருக்கின்ற ஒரு சூழல் உருவாகியிருக்கின்றது. இத்தகைய சூழலில் குறிப்பாக முஸ்லிம்களின் கையிலிருந்து கிழக்கு உள்ளூராட்சி மன்றங்கள் பறிபோவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

ஆகவே உள்ளூராட்சி மன்றங்களை மீட்டெடுப்பதற்கு தமிழ்த் தரப்பு ஒன்றிணைந்த செயற்பாட்டை மேற்கொள்ளத்தவறினால் நிச்சயமாக தமிழ் மக்கள் பாரிய இன்னல்களை சந்திக்க நேரிடும். பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் நகர்வுகள் ஒவ்வொன்றும் தமிழ்க் கட்சிகளை சின்னாபின்னப்படுத்துகின்ற வகையில் நகர்த்தப்படுகின்றது. எனவே தமிழ்க் கட்சிகள் தமிழினத்தின் விடுதலைக்காக ஒன்றுபடவேண்டும் என்பது காலத்தின் தேவைப்பாடாகும்.

204

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்



உங்களுக்கு முன்னால் ஆளுயரத்தில் மூன்று ஓடுகின்ற இலக்குகளாகவும் அதிலொன்று மாத்திரம் காப்பொன்றிற்குள் மறைந்து சுட்டுக்கொண்டிருக்குமானால் முதலாவதாகச் சுடவேண்டிய பிரதான இலக்கு சுட்டுக்கொண்டிருக்கின்ற எதிரியே ஆகும். இந்நேரத்தில் மிக இலகுவானதும் பெரிய இலக்குகளையும் சுட எத்தனிக்கக்கூடாது.

அருகில் வந்துவிழுந்த கையெறிகுண்டிலிருந்து தப்பிக்கொள்ள வேண்டுமானால் தலை குண்டிருக்கின்ற பக்கத்தை நோக்கியவாறு முகங்குப்புற விழவேண்டும். (தலைக்கவசம் இல்லையாயின்) தலையை உள்ளங்கையினால் பொத்திக்கொண்டு வாயைத் திறந்து வைத்திருக்கவும் (வெடிப்பதிர்வினால் செவிப்பறை தாக்குப்படாமல் இருப்பதற்காக) வேண்டும். கையெறிகுண்டை முதலில் அவதானித்தவன் 'வலப்பக்கம் (இடப்பக்கம். முன்னுக்கு. பின்னுக்கு) குண்டு' என்ற சைகையை வழங்க வேண்டும். எதிர்பாராதவிதமாக எதிரியின் தாக்குதலுக்குள்ளாகும்போது அருகிலுள்ள காப்புக்குள் ஒரேநேரத்தில் சூட்டுக்கு நிலையெடுத்தபடி விழவேண்டும். அனுபவங்களின் பிரகாரம் இதனை வீரர்கள் நிறைவேற்றுவதில்லை. வழக்கமாக யாராவது ஒருவன் அந்த இடத்திலேயே நின்றபடி எதிரிக்கு இலக்கை நன்றாகக் காட்டியவாறு சுடத்தொடங்குவான். ஏனையோர் காப்புக்குள் விழுவார்கள். ஆனால் தோளில் தொங்குகின்ற ஆயுதத்தைக் கையிலெடுக்க மறந்துவிடுவார்கள். அதன் பின்னர் சூடு மேற்கொள்ளச் சாத்தியமற்ற நிலையிலிருந்தபடி வசதியற்ற நிலையிலிருக்கின்ற ஆயுதத்தைக் கையிலெடுக்க முயற்சிப்பார்கள். நடுக்கத்தினால் (பயம். பலமான நரம்பு விறைப்பு. சூழ்நிலைக்கேற்ற எதிர்ச்செயற்பாடின்மை. கட்டளைகள் போன்றவற்றினால்) கீழே விழுகின்ற சிலரும் இருக்கின்றார்கள்.

ஆகவேதான் வீரர்கள் பின்வரும் நிலையை எட்டும்வரை கற்பிக்கவேண்டும். அதாவது பெரியளவிலான சூட்டுக்குள் அகப்படும்போதும் சுயநிலையை இழக்காமலிருத்தலாகும். கிட்டத்தட்ட நம்பிக்கையற்ற சூழ்நிலையொன்றில் வீரர்களின் சரியான செயற்பாடுகள் அவர்களது உயிரைக்காத்ததற்கு ஓர் எடுத்துக்காட்டைக் கூறுகின்றேன். ஸ்பெற்னாசைச் சேர்ந்த வேவு நடவடிக்கைக் குழுவொன்று கப்டன் கென்னடியின் தலைமையில் இரவு முஜாகு தீன்களின் தொடரணி ஒன்றிற்கெதிராகப் பதுங்கித் தாக்குதல் மேற்கொள்வதற்காகத் திட்டமிடப்பட்ட இடத்திற்குச் சென்றது. சிறிதளவு இடைவெளியில் முன்னே முன்புல வேவுக்குழு (இரண்டு பேர்) சென்றுகொண்டிருந்தது. அதற்குப் பின்னால் சிறிது இடைவெளியில் கட்டளையாளனின் தலைமையில் குழு சென்றுகொண்டிருந்தது. பாதையில் சென்றுகொண்டிருந்த குழு சிறிய மலையொன்றைச் சென்றடைந்தது. முன்புல வேவுக்குழு மலையுச்சியைப் பார்த்துவிட்டு மலையின் பிறிதொரு பக்கத்தால் கீழ்நோக்கிச் செல்லத் தொடங்கியது. அவ்வணியைத் தொடர்ந்து குழுக் கட்டளையாளன் கென்னடியும் உச்சிக்கு வந்திருந்தான். இந்நேரத்தில் இடதுபக்கமாக மலையுச்சிக்கு முஜாகுதீன்களின் குழுவொன்றும் ஏறிவந்துவிட்டது. அக்குழுவில் முன்னுக்கு வந்த முன்புல வீரர்கள் வானவிளிம்பில் தோன்றிய மனித விம்பத்தைக் கண்டதும் கீழே விழுந்து சுடத்தொடங்கினர்.

கென்னடிக்கும் கெரில்லாக்களுக்கும் இடையிலான தூர இடைவெளி கிட்டத்தட்ட 10 மீற்றராக இருந்தது. கென்னடி சரசரப்பையும் பாதுகாப்பு நெம்பு முடுக்கிவிடப்படும் சத்தத்தையும் (எதிரிகளிடத்தில் 7.62 மி.மீ ஏ.கே சுடுகலன்கள் இருந்தன) கேட்டான். சூட்டுக்கு முன்னான அந்த மில்லி செக்கன் நேரத்தில் அவன் தனது முதுகுப் பையைக் கழற்றி அதனைத் தனக்கு முன்னே காப்பாகப் பிடித்து அதன் பின்னால் தான் காப்பெடுத்தபடி நிலையெடுப்பதில் வெற்றிகண்டான். முஜாகுதீன்களே முதலில் சூட்டை மேற்கொண்டார்கள். இரண்டு ஏ.கே ஆயுதத்திலிருந்து பறந்து வந்த ரவைகள் முதுகுப்பையைக் கிழித்துக்கொண்டு ஆயுதத்தையும் ரவைக்கூட்டுடனான கோல்சரையும் ஊடுருவிச் சென்று கென்னடியின் மார்பில் தைத்துக்கொண்டன. இவ்வளவு கணிசமான தடைகள் யாவும் ரவையின் துளைப்புத் திறனைக் குறைத்துவிட்டமையால் காயம் உயிர்பறிக்கும் காயமாக அமையவில்லை. நெருங்கிவந்த பிற வேவு நடவடிக்கை வீரர்கள் சுட்டுக்கொண்டிருந்த எதிரியின் முன்புல வீரர்களை அழித்தனர். கெரில்லாக்களின் பிரதான குழு சூட்டுச் சம்பவ இடத்திற்கு வந்தவேளை அவர்களிடமிருந்து தங்களை விடுவித்துக்கொண்டு வீரர்கள் மலைச்சரிவு வழியே கீழே சென்றிருந்தனர். இதன் போது காயமடைந்திருந்த கென்னடி காயத்திற்குக் கட்டிடாமல் அதனை உள்ளங்கையால் அழுத்திப் பிடித்தபடி கிட்டத்தட்ட ஒரு கிலோமீற்றர் தூரம் தானாகவே ஓடினான் (இறுதியில் அவனது மார்பிலிருந்து நான்கு ரவைகளின் சன்னங்கள் அகற்றப்பட்டது).

இவ்வாறான தகுந்த எதிர்ச்செயற்பாடு சரியான நடவடிக்கைகள் போன்றனவே நேராகச் சுடப்பட்ட இரண்டு சுடுகலன்களின் சூடுகளிலிருந்து அதிகாரி உயிர்தப்ப உதவியது.

முற்றும்




உலக வரலாற்றில் குறுஞ்சமர் எனும் தொடர் இந்த வாரத்துடன் நிறைவுக்கு வருவதோடு. தினப்புயலின் வாசகர்களுக்காக பல்துறை எழுத்தாளர் புயல் பெ.ஶ்ரீகந்தநேஷன் அவர்களின் "கல்லறை பூக்கள்" எனும் கதை வருகின்ற வாரங்களில் புதிய தொடராக வெளிவரக் காத்திருக்கின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

# ரணிலின் இராஜதந்திர விஜயமும், உள்ளூராட்சிமன்றத் தேர்தலும்

இலங்கையின் உள்ளூராட்சி சபை (Local Government in Sri Lanka) என்பது இலங்கையின் அமைச்சரவை, மாகாண சபைகள் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக உள்ள ஆட்சி அமைப்பாகும். முன்னைய காலங்களில் இலங்கையில் மாநகரசபை, பட்டின சபை, கிராம சபை என்றவாறான உள்ளூராட்சி மன்றங்களே காணப்பட்டன. பின்னர் 1987 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தத்தின் படி இலங்கையில் 4 வகையான உள்ளூராட்சி சபைகள் நிறுவப்பட்டன. அவை:
மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள், மற்றும் கிராம அபிவிருத்தி சபைகள் என்பனவாகும்.
உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் இலங்கையில் 2018 பெப்ரவரி 10 இல் இடம்பெற்றன. இத்தேர்தலில் 15.8 மில்லியன் வாக்காளர்கள் 341 உள்ளூராட்சி சபைகளில் (24 மாநகராட்சிகள், 41 நகரசபைகள், 276 பிரதேச சபைகள்) இருந்து 8,356 உறுப்பினர்களைத் தெரிவு செய்தனர். அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல்கள் இலங்கையில் ஒரே நாளில் நடத்தப்பட்டமை இதுவே முதற் தடவையாகும். இத்தேர்தலில் முதற்தடவையாக கலப்பு தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறைப்படி, 60% உறுப்பினர்கள் வட்டாரங்களில் இருந்து நேரடியாகவும், 40% உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையிலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவற்றின் பதவிக்காலம் மேலதிகமாக ஒரு வருடத்தினால் நீடிக்கப்பட்டது. உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலத்தை மேலதிகமாக ஒரு வருடத்தினால் மட்டும் நீடிக்கும் அதிகாரம் அதற்குப் பொறுப்பான அமைச்சருக்கு உள்ளது.

இலங்கையில் மொத்தமாகவுள்ள 341 உள்ளூராட்சி சபைகளில் 340 சபைகளுக்கான தேர்தல்கள் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி நடந்தன. எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் அடுத்த வருடமே நடைபெற்றது. அங்கு தேர்தலில் போட்டியிடுவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுவொன்று நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக, உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டமை காரணமாக, எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் தனியாக 2019 ஒக்டோபர் மாதம் நடத்தப்பட்டது. உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் 4 வருடங்களாகும். அந்த வகையில், எல்பிட்டிய பிரதேச சபை தவிர்ந்த ஏனைய அனைத்து சபைகளின் பதவிக் காலமும் 2022 பெப்ரவரி மாதத்துடன் நிறைவுக்கு வந்தன. ஆயினும், உள்ளூராட்சி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், அந்த சபைகளின் பதவிக் காலம் ஒரு வருடத்தினால் நீடிக்கப்பட்டது.

இந்தப் பின்னணியில் 2023 மார்ச் மாதத்துக்குள் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டிய கடப்பாடு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளது.
சென்ற நான்காம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான அறிவிப்பை இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டிருந்தது. இந்த நிலையில் எல்பிட்டிய பிரதேச சபை தவிர்ந்த ஏனைய முந்நூற்று நாற்பது உள்ளூராட்சி சபைகளுக்கும் வேட்பு மனுத் தாக்கல் இடம்பெறுகின்றன. இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்படமாட்டாது என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். தேர்தல் நடைபெறும் என்றும் இதன் மூலம் அரசாங்கம் எதிர்கட்சிகளின் பலத்தை அறிய முடியும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார். தேர்தலை எதிர்கொள்ள அரசாங்கம் பயப்படவில்லை என்றும் அமைச்சர் மகிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.




தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்ற கேள்விகளுக்கு அப்பால், வேட்புமனுத் தாக்கல் குறித்த அறிவிப்பு வந்தவுடன் கட்சிகள் மற்றும் கூட்டமைப்புகள் அதன் தலைவர்கள் சுறுசுறுப்படைந்து விட்டனர். யாருடன் யார் இணைந்து போட்டியிடப்போகின்றார்கள் என்ற எதிர்பார்ப்புக்கள் மத்தியில் ஒரே கூட்டணிக்குள் இருந்த பிளவுகள் எதிர் எதிரணிகளுக்கிடையில் இருந்த இணைவுகள் என பல சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

அந்த வகையிலே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் வடக்குக்கான விஜயமொன்றை அண்மையில் மேற்கொண்டிருந்தார். குறித்த விஜயத்தின் உள்நோக்கம் குறித்துப் பார்ப்போமானால், அரசியலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க என்ற ஒருவர் நரி என அழைக்கப்படுகின்றார். இதனுடைய காரணத்தை பார்த்தால் 2004 தொடக்கம் இவருடைய நரித்தந்திர அரசியல் நடவடிக்கைகளினால் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்டது. இவ்வாறு ரணில் விக்ரமசிங்க நடந்துகொண்டதையடுத்து அவரை தோல்வியடையச் செய்யவேண்டும் என்ற நோக்கில் மகிந்த தரப்பு குறித்தவொரு ஆயுத குழுக்களுக்கு பணம் கொடுத்து ரணிலை ஜனாதிபதி தேர்தலில் இருந்து தோற்கடித்த வரலாற்றைத் தொடர்ந்து ரணில் விக்ரமசிங்கவின் காய்நகர்த்தல் ஒவ்வொன்றும் தோல்விகளில் இருந்து வெற்றிகளை குவிப்பதாக, கட்சிகளை பிளவுபடுத்துவதும் அல்லது இல்லாதொழிப்பதும், சண்டைகளை மூட்டிவிடுவதுமான விடயங்களை பூகோள அரசியல் சார்ந்து அரசியலையும் நகர்த்திச் செல்கின்ற ஒருவராகவே இதுவரையிலும் அவர் செயற்பட்டு வருகின்றார்.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெறாது உலகத்தில் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் வந்த ஒரேயொரு தலைவர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் மட்டுமே எனலாம். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினுடைய ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற பலத்தை இழந்துள்ள நிலையில் மீளவும் பாராளுமன்ற பலத்தைக் கட்சியெழுப்புவதற்கான நடவடிக்கைகளையே அவர் இராஜ தந்திர ரீதியில் நாடு முழுவதும் மேற்கொண்டு வருகின்றார். இதனைப் புரிந்துகொள்ளாத அரசியல் தரப்புக்கள் ரணில் விக்ரமசிங்க ஏவிவிடுகின்ற அம்புகளுக்கு இரையாகிக்கொண்டு இருக்கின்றார்கள்.

காணிப் பிரச்சினைகளை திரை மறைவிலிருந்து இயக்குகின்றார் மற்றும் அதிகாரப் பரவலாக்கல் போன்ற விடயங்கள், உள்ளூராட்சி சபை தேர்தல், மாகாண சபைத் தேர்தல் போன்ற விடயங்களிலும் கட்சிகளுக்கிடையே பல பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு தேர்தல் நடக்குமா இல்லையா என்ற கேள்வியையும், அதனை நடத்தவிடாது தடுத்து நிறுத்துவதற்கான மற்றுமொரு அணியையும் இவர் தயார்ப்படுத்துகின்றார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவா கூட்டத்தொடர் இடம்பெற இருப்பதால் அதனை திசை திருப்பும் நோக்கில் தற்பொழுது உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெறுவது போன்ற ஒரு பரபரப்பை ஏற்படுத்தி, கட்சிகள் அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்க, ஜெனீவா விவகாரத்தில் கூடிய கவனம் செலுத்தாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளே திட்டமிட்டு நகர்த்தப்படுகின்றன.

குறிப்பாக சீனா, அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகளின் ஆதரவோடு ஜனாதிபதியின் அரசியல் காய்நகர்த்தல்கள் கச்சிதமாக இடம்பெறுகின்றது. விரும்பியோ விரும்பாமலோ தமிழ்த் தரப்புக்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கருத்துக்களை செவிமடுக்கின்றனர். நல்லாட்சி ஒன்றை அமைத்து எதிர்க்கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வைத்து அழகு பார்த்த ரணில், அதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சின்னாபின்னமாக உடைத்த கையோடு யாழ் மண்ணிற்கு காலடி எடுத்து வைத்துள்ளார்.

தமிழ்த் தரப்போடு சந்தோசமாக பொங்கலையும் கொண்டாடி, பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகின்ற ஒரு வேலைத்திட்டத்தையே அவர் திரைமறைவில் செய்துள்ளார். ஜனநாயக ரீதியாக நடக்கின்றோம் என்பதை வெளி உலகிற்கு காண்பித்து உள் நடவடிக்கைகளாக தென்னிலங்கையில் செயற்படும் கட்சிகளையும், வடகிழக்கில் செயற்படும் தமிழ்க் கட்சிகளையும் இராஜதந்திரமாக பிரிக்கும் நடவடிக்கைகளை அவர் கையாண்டு வருகின்றார். அரகல போராட்டத்தின் ஊடாக தனது ஆட்சியை சௌகரியமாக அமைத்துக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள், இன்று ராஜபக்ஷ தரப்பினரை பாதுகாக்கும் ஒருவராகவும், தமிழ் மக்களினுடைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுகின்றோம் என்ற போர்வையில், அடுத்தகட்ட விளைவை எதிர்பார்க்காத தமிழ் தரப்பு ரணிலின் நல்ல குணத்தை பாராட்டி அவருக்கு பொன்னாடையும் போர்த்துகின்றனர்.

குறிப்பாக அரசியலில் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்ற நடவடிக்கையையே ரணில் விக்ரமசிங்க அவர்கள் நாசுக்காக செய்து வருகின்றார். குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனி இல்லை என்றவொரு கருத்தே தற்பொழுது சமூக ஊடகங்களில் பரப்பிவிடப்பட்டுள்ளது. TNA உடைக்கப்பட்டு DTNA என்ற ஒன்று உருவாவதற்கு மிக முக்கிய சூத்திரதாரியாக ரணில் அவர்களே அமைந்துள்ளார். தொடர்ந்தும் இவர் இந்த அரசியல் அரங்கில் இருப்பாராக இருந்தால் மஹிந்த குடும்பத்தையும் அவரது அரசியலையும் ஒரு பக்கத்தில் ஓரங்கட்டி, தனது ஐக்கிய தேசிய கட்சியை (UNP) மீளவும் கட்டியெழுப்பியதன் பின்னரே அவர் அரசியல் அரங்கிலிருந்து ஓய்வு பெறுவார் என்பதே இன்றைய நிலைப்பாடாக இருக்கின்றது. அதற்காக எவ்வாறெல்லாம் தமிழ்த் தரப்பை பயன்படுத்தி தனது அரசியல் அரங்கை பலப்படுத்த முடியுமோ, சுமந்திரன், சம்பந்தன் போன்றோர்களை ஒரு பகடைக்காய்களாகப் பயன்படுத்தி வருகின்றார்.

உள்நாட்டுப் பொறிமுறையின் ஊடாக தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற தோரணையில் இவரின் செயற்பாடுகள் நகர்த்தப்படுகின்றன. தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றுக்கு இடமில்லாத அளவிற்கே இவரின் செயற்பாடுகள் அமைகின்றன. ரணிலின் அரசியல் காய்நகர்த்தலுக்கு முதலில் மடங்கிப்போனது தமிழரசுக் கட்சி அல்ல, ரெலோ கட்சிதான். அதன் ஊடாகவே கட்சிக்குள் பிளவுகளை ஏற்படுத்தி, தற்பொழுது தொடர்ந்தும் தனது அரசியலில் உள்நோக்கங்கள் பலவற்றை மறைத்துக்கொண்டு மிகக் கவனமாக காய்களை அரசியல் அரங்கில் நகர்த்தி வருகின்றார் இன்றைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மாதுரி

# தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவடையவில்லை

**தமிழரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா அவர்கள் தினப்புயல் பத்திரிகைக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்**



**கேள்வி : இன்றைய சமகால அரசியலில் TNA ஆக இருந்த ஒரு கூட்டு உடைந்திருக்கின்றது அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை உடைத்துவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டு தமிழரசுக் கட்சியின் மீது சுமத்தப்பட்டிருக்கின்றது. இது தொடர்பாக கட்சியின் தலைவராக நீங்கள் கூறும் கருத்து என்ன?**

**பதில் :** உடைந்துவிட்டது என்ற கருத்திற்கு நாங்கள் இடம்கொடுக்கவில்லை. இந்த தேர்தல் சட்டவிதிகள் ஆரோக்கிய மானதாக இருக்கவில்லை. தேர்தல் முறையும் வட்டார ரீதியாக கட்சிகள் போட்டியிட்டு பெற்ற வாக்குகளின் அடிப்படையில் நிர்வாகத்தை நடத்திவிட்ட சந்தர்ப்பங்கள் இருந்தாலும் விகிதாசார அடிப்படையில் ஒரு சிலர் 100 வாக்குகளைப் பெறாதவர்கள் கூட தலைவர்களாக வரக்கூடியளவிற்கு பெரும்பான்மை பலத்தை வட்டாரத்தரத்தை வெற்றி பெற்றிருப்பதன் வெளியிலும் அதற்கு அப்பாலும் அந்த பிரதிநிதித்துவத்தை கொண்டிருந்தவர்களின் நிலைமை இருந்தது. அதனால் என்னுடைய அனுபவத்தில் அந்த சபைகள் ஆரோக்கியமாக தங்களது திட்டங்களை நடை முறைப்படுத்தவோ தீர்மானங்களை எடுப்பதற்கோ பிற கட்சிகளுக்கு அல்லது ஆளுகின்ற நிர்வாகத்திற்கு எதிராக இருக்கின்றவர்களின் ஆதரவில்தான் இந்த சபைகள் நடைபெற்றுவரவேண்டிய ஒரு நியாயமற்ற தேர்தல் முறை யாகத்தான் இது இருந்தது. இதை மாற்றியமைக்கவேண்டும்என பல தடவைகள் முயற்சித்தபொழுதும் பாராளுமன்றத்தில் அது திருத்தியமைக்கப்படவில்லை. விகி தாசாரத்தையும் மாற்றியமைக்க வேண்டும் என்று தான் ஏற்கனவே ஆராயப்பட்டு ஒரு திருத்தத்தை கொண்டுவரவேண்டும் என இருந்தது. அது நடைபெறவில்லை.

இந்த முறையில் எங்களது கட்சியிலும் வெளியிலும் இந்த முறையில் முதலாவதாக இந்த வாக்களிப்பில் வட்டார ரீதியாக அளிக்கின்ற வாக்குகளின் மூலம் தெரிவுசெய்யப்படுவதும் விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்படுவதும் முதன்முதலாக வாக்குகள் அளிக்கப்பட்டவர்களின் விகிதாசார அடிப்படையில் அல்லது மாவட்ட அடிப்படையில் வெற்றி பெற்றவர்கள் ஆட்சி நிர்வாகத்தை பொறுப்பேற்பதற்கு பதிலாக விகிதாசார அடிப்படையில் ஒரு சிலர் 100 வாக்குகளைப் பெற்றவர்கள் கூட அந்த அந்த சபைகளிலே அவர்கள் ஆட்சி அமைக்கின்ற நிலைமை இருக்கின்றது.

உதாரணமாக வவுனியாவில் பார்த்தால் தெரியும். ஒரு சிலர் 100 வாக்குகளைப்பெற்றவர்கூட அதற்கு எதிராக வெளியிலே கூடுதலான வாக்குகளைப் பெற்றவர்கள் தெரிவு செய்யப்படாமல் அல்லது தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு ஆட்சி செய்வதற்குரிய வாய்ப்புக்கள் இல்லாமல் வேறு வேறு முரண்பட்ட கட்சிகளினுடைய ஆதரவைப் பெற்றுத்தான் ஆட்சிகளை நடத்துகின்ற ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு அணுகல் முறையை பரிசீலிக்க வேண்டியிருந்தது.

இந்த தேர்தலில் பெற்ற வாக்குகளை முதன்முறையாக பெறக்கூடிய வாக்குகளோடு மிக குறைந்தளவில் வாக்குகளைப் பெறுகின்றவர்கள் வேறு வேறு அணியினர் பிரதிநிதித்துவத்தை பெறுகின்ற நடைமுறையில் அவர்கள் கூடுதலான வாக்குகளைப் பெற்றவர்களுடைய பிரதிநிதித்துவத்தை அவர்கள் எதிர்த்து நிற்கின்ற அந்த சபை நடத்த முடியாமல் நடக்கின்ற பிரச்சினைகளுக்கு பதிலாக நாங்களும் தனித்தனியாக தேர்தலிலே போட்டியிட்டால் குறைந்தளவில் பெறுகின்ற வாக்கு களையும், எங்களில் குறைந்த வாக்குகளை பெறுகின்ற அதாவது தேசிய கூட்டமைப்பாகவே நாங்கள் போட்டியிடுகின்றோம் என்றும், குறைந்த வாக்குகளைப் பெற்று வேறு வேறு அணியினர் பெறுகின்ற வாக்குகளையும் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளே பெறக்கூடிய ஒரு நிலைமையும் எங்களுக்கு நன்மையாகவும் இருக்க முடியும் என்றும் ஆலோசித்த தைத்தான் நாங்கள் மற்றைய இரண்டு கட்சிகளோடும் பேசியிருக்கின்றோம். அந்த நடைமுறையிலிருந்து வேறு நடைமுறைகளை நாங்கள் கடைப்பிடிப்பதற்கு. இந்த தேர்தல் நடத்துவதற்கு இருந்த கால அவகாசமும் எங்களுக்கு போதுமானதாக இருக்கவில்லை.

ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே நாங்கள் போட்டியிடுவது என்றும் ஆனால் ஒவ்வொரு கட்சியும் தனித்தனியாக தங்களது சின்னத்தில் போட்டியிடுவதன் மூலம் எஞ்சிய வாக்குகளையும் அந்த எஞ்சிய வாக்குகளிலும் நாங்கள் பிரதிநிதித்துவத்தைப் பெற்று அதன் பின்பு ஒரு அணியாக நாங்கள் வேலை செய்வதன் மூலம் கூடுதலான சபைகளை நாங்கள் வெற்றி பெறக்கூடியதாக இருக்கும் என்றஎண்ணத்தில் இவ்வாறான ஒரு நிலைமை அறிந்திருக்கின்றோம். அந்த விடயத்தைப் பற்றி நாங்கள் மற்றைய ஏனைய கட்சிகளுடன் பேசியதன் பின்னர் தீர்மானம் எடுத்துக்கொண்டது என்னவென்றால் இனப் பிரச்சினைக்கான தீர்வுகள் பற்றி அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடும் பொழுது எங்களது கட்சியில் இருக்கின்ற அனைவரும் தேசியத்தை அடிப்படையாகக்கொண்ட கட்சிகள் ஒன்றாக செயற்பட வேண்டும் என்ற தீர்மானத்தையும் எடுத்திருக்கின்றோம்.

அதன் அடிப்படையில் தான் 7 ஆம் திகதி செயற்குழுவில் இதனைப் பற்றி பரிசீலித்ததன் பின்னர் 9 ஆம் திகதிகளிலோ எங்களோடு தேசிய கட்சிகளாக பங்கு பற்றியவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி யிருக்கின்றோம். 9 ஆம் திகதி நாங்கள் பேசி எடுத்த முடிவின்படி நாங்கள் இனப்பிரச்சினையின் தீர்விற்காக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்கு ஒன்றாகவே செல்லவேண்டும் என தீர்மானித்து, அதேபோன்று நாங்கள் சென்று ஜனாதிபதியை சந்தித்து பேசியிருப்பதை உதாரணமாக காட்ட முடியும். எனவே உடைந்துவிட்டோம், வேறாகிவிட்டோம் என்ற கருத்தை பயன்படுத்துவது பிழை என்று நான் நினைக்கின்றேன்.

முக்கியமாக இனப் பிரச்சினையில் நாங்கள் ஒன்றாக செயற்படுவோம் என்பதை அடுத்த நாளே ஜனாதிபதியிடம் சென்று பேசியதையும் முன்னிலைப்படுத்த முடியும்.

**கேள்வி: இதுவொரு தேர்தல். கூட்டாக இணைவது அதாவது மீளவும் நீங்கள் புளொட், ரெலோவுடன் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றதா?**

**பதில் :** இனப்பிரச்சினை தீர்வில் அல்லது வேறு சந்தர்ப்பங்களில் நாங்கள் ஒன்றாக இருப்பதற்கு சந்தர்ப்பங்கள் கட்டாயமாக இருக்கின்றது என்று தான் நம்புகின்றேன்.

**கேள்வி : இந்த கூட்டமைப்பைக் கூட நீங்கள் உங்களது அணியில் இணைத்து தேர்தலிலே போட்டி யிடக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றதா?**

**பதில் :** தற்பொழுது இந்த தேர்தலில் நாங்கள் அவர்களுடன் பேசிய முறையில் இந்த வாக்குகளின் அடிப்படையில் பெறுகின்ற பிரதிநிதிகள் அந்த அந்த சபைகளில் ஆட்சியமைக்கின்ற பொழுது நாங்கள் ஒன்றாக கூடியே தேசிய கூட்டமைப்பு என்ற முறையிலும் அந்த ஆட்சியை அமைக்கலாம் என்ற பேச்சுக்களிலும் நாங்கள் ஈடுபட்டிருக்கின்றோம். அதன்படி அனைத்துமுயற்சிகளையும்எடுக்க, நாங்கள் ஒன்றாக அந்தந்த பிரதேச சபைகளிலும் ஆட்சியமைக்க ஒன்றுபட்டிருக்கலாம் என்பது தான் என்னுடைய கருத்து.




**நேர்காணல் : மறவன்**

# ஜெனீவா தீர்மானங்கள், தமிழ் மக்களுக்கான தீர்வாக அமையப்பெறுமா?



யுத்தம் நிறைவடைந்து 13 ஆண்டுகளை கடந்துள்ள நிலையில் 75வது சுதந்திர தினம் இடம்பெறவிருக்கின்றது. அத்துடன் இந்த நாட்டில் இருக்கின்ற இனப்படுகொலை சம்பந்தமாகவும் மற்றும் தமிழ் மக்களின் தீர்வு திட்டம் தொடர்பிலும் சரியான முடிவை எடுக்கப்போவதாகவும் தற்பொழுது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் அறிவித்திருக்கின்ற நிலையில், தற்பொழுது இவ்வாறான பாசாங்கான விடயங்கள் ஒவ்வொன்றும் ஜெனீவா தீர்மானங்களை கிடப்பில் போடும் நிலைமை தற்பொழுது உருவாகியிருக்கின்றது.

அதனோடு சில விடயங்களையும் நாங்கள் பார்க்கின்றபொழுது ஜெனீவா தீர்மானங்களின் ஊடாக தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற ஒரு நிலையிருக்க, எனினும் தற்போதைய சூழலில் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலை காணப்படுவதாக ஆய்வறிக்கைகள் கூறுகின்றன. அதே நேரத்தில் உள்ளூர் விவகாரங்கள் அதாவது உள்ளக பொறிமுறைகளின் ஊடாகவே இலங்கையில் ஏற்பட்ட மனித உரிமை மீறல்கள், போர் குற்றங்கள் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை எட்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டையே அரசாங்கம் கொண்டுள்ளது.

அதற்காக இலங்கை அரசாங்கத்தை காப்பாற்றுவதற்காக தமிழ் தரப்பை பயன்படுத்துகின்ற ஒரு பொறிமுறையைத் தான் அரசாங்கம் கையாண்டிருக்கின்றது என்று கூறவேண்டும். இவ்வாறு ஒரு மிலேச்சத்தனமான செயற்பாடுகளை செயற்படுத்துவதனால் தற்பொழுது தமிழ் மக்கள் ஜெனீவா மீது கொண்டிருக்கின்ற அந்த நம்பிக்கை தளர்ந்துவருகின்றது. காரணம் என்னவென்றால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் இந்த அரசாங்கத்தை காப்பாற்ற வேண்டும், இந்த நாட்டை காப்பாற்ற வேண்டும், தமது இராணுவ வீரர்களை காப்பாற்ற வேண்டும் என்ற நடவடிக்கைகளையே அவர் செய்துவருகின்றார். எனவே இவ்வாறு தொடருமாக இருந்தால் நிச்சயமாக உள்ளக பொறிமுறையினூடாக அடுத்தகட்ட தீர்வு என்னும் பொழுது குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்கள், மாகாணசபை, பாராளுமன்றம், ஜனாதிபதி என தேர்தல்களை வைப்பதாக கூறி ஒரு ஜனநாயகம் இந்த நாட்டிலே நிலைநிறுத்தப்படுகின்றது எனக்கூறி அதன் ஊடாக காய் நகர்த்தி செல்வதற்கே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முனைந்துவருகின்றார் என்பது இனிவரும் காலங்களில் இடம்பெறும் ஜெனீவா தீர்மானங்களுக்கு அல்லது ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கின்ற ஜெனீவா தீர்மானங்கள் கிடப்பிலே போடப்படுகின்ற ஒரு சூழல் உருவாகும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை என்பதே இன்றைய நிலைப்பாடு.

**கிடப்பில் போடப்பட்டுள்ள ஜெனீவா தீர்மானங்கள் சொல்லும் செய்தி என்ன?**

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பட்டயதின் நோக்கங்களையும் கோட்பாடுகளையும் மீளஉறுதிப்படுத்துதல்.

மனித உரிமைகளின் பூகோள பிரகடத்தினாலும் மனித உரிமைகள் மீதான சர்வதேச சமவாயங்களினாலும் பிற இணைப்புள்ள சாதனங்களினாலும் வழங்கப்படும் வழிகாட்டல்.

இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்புக் கூறலையும் ஊக்குவித்தல் மீது நிறைவேற்றப்பட்ட 2012 மார்ச் 22ஆந் திகயிடப்பட்டதும் 19/2 ஆம் இலக்கத்தைக் கொண்டதும் 2013 மார்ச் 21 ஆந் திகதியிடப்பட்டதும் 22/1 ஆம் இலக்கத்தைக் கொண்டதும் 2014 மார்ச் 27 ஆம் திகதியிடப்பட்டதும் 25/1 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான மனித உரிமைகள் மன்றத் தீர்மானங்களையும் நினைவு கூறுதல்.

இலங்கையின் இறைமைக்கும் சுதந்திரத்திற்கும் ஒருமைப்பாட்டிட்கும் ஆள்புல முழுமைக்குமான தனது பொறுப்பை மீள உறுதிப்படுத்துதல்.

நாடு ஒவ்வொன்றும் தனது மக்கள் அனைவர்களினதும் சகல மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் அவர்களினால் முழுமையாக அனுபவிக்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல். நாடு ஒவ்வொன்றினதும் பொறுப்பு என்பதை மீள உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.

இலங்கையில் 2015 ஜனவரியிலும் ஓகஸ்டிலும் வரலாற்றுச் சுதந்திரமானதும் நியாயமானதுமான முறையிலும் ஜனநாயக முறையிலும் நடாத்தப்பட்ட தேர்தல்களையும் சமாதானமான முறையில் இடம்பெற்ற அரசியல் மாற்றமும் வரவேற்கப்படுகின்றது.

இலங்கையின் ஜனாதிபதியின் அரசியலமைப்புக் கடமைகளுக்குள் தேசிய நல்லமைப்புக் கடமைகளுக்குள் தேசிய நல்லினக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் ஊக்குவித்தல் மீதான ஏற்பாட்டையும் உள்ளடக்கி முக்கியமான நிறுவனங்களின் ஜனநாயக ஆட்சியையும் சுதந்திரமான மேற்பார்வையையும் ஊக்குவிப்பதற்காக இலங்கையின் அரசியலமைப்பின் பத்தொன்பதாவது திருத்தத்தின் நிறைவேற்றத்தையும் செயற்படுத்துகையையும் கவனத்திற்கு எடுத்துக்கொள்கின்றது.

மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதற்கும் நல்லாட்சியையும் ஜனநாயக நிறுவனங்களையும் பலப்படுத்துவதற்குமாக 2015 ஜனவரியிலிருந்து இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை வரவேற்கின்றது.

இலஞ்சம், ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுகளை விசாரனை செய்வதற்கும் அத்தகைய விசாரணைகளின் முக்கியத்து வத்தையும் தண்டனையிலிருந்து விலக்க ளிக்கப்படுவதற்கு பொறுப்பாகவுள்ளவர்ளுக்கு எதிராக வழக்குத்தொடுப்பதற்கும் நல்லாட்சியை ஊக்குவிப்பதற்கும் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் முயற்சியை வரவேற்கின்றது.

முன்னைய மோதல்களினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிவில் நிர்வாகத்தைப் பலப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் உட்கட்டமைப்பை மீளக்கட்டி எழுப்புதல், கண்ணிவெடி அகற்றுதல், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துதல் ஆகியவற்றில் இலங்கை அரசாங்கத்தினால் அடையப்பட்ட முன்னேற்றத்தையும் இந்த முயற்சிகளை மேலும் விரிவாக்குவதற்கு விசேடமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்த சகல மக்களுக்கும் நடைமுறையை துரிதப்படுத்துவதன் பொருட்டு ஐக்கிய நாடுகள் அமைப்பையும் உள்ளடக்கி சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டதையும் வரவேற்கப்படுகின்றது.

பால் மற்றும் பால் அடிப்படையிலான வன்செயல், சித்திரவதை, ஆட்கடத்தல்கள் மற்றும் மனித உரிமை பாதுகாப்பாளர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு எதிராக மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் விடுத்தல்கள், ஆகியவற்றில் சம்பந்தப்பட்டவர்களின் விடயங்களையும் உள்ளடக்கி இந்த விடயங்களுக்கு கவனம் செலுத்தப்படுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் தெரிவிக்கப்பட்ட பொறுப்பை ஏற்றுக்கொண்டும் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் வன்செயல்கள் மற்றும் மனித உரிமை துஷ்பிரயோகம் பற்றிய கரிசனையை தெரிவிக்கின்ற அதேவேளை இலங்கையிலுள்ள சிவில் சமூகத்தின் உறுப்பினர்களின் திருத்தமடைந்த சுற்றாடல் அங்கீகரிக்கப்படுகிறது.

ஓர் சமாதானமானதும் ஒன்றிணைக் கப்பட்டதுமான நாட்டில் சமயம், நம்பிக்கை அல்லது இனம் பற்றிய விடயம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாமல் சகல இலங்கையர்களுக்கும் அவர்களுடைய மனித உரிமையாளர்களை முழுமையாக அனுபவிப்பதற்கு உரிமையுடையவர்கள் என்பது மீள உறுதிப்படுத்தப்படுகின்றது.

பயங்கரவாதத்தை எதிர்த்து போராடுவதற்கு எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் சர்வதேச சட்டத்தின் கீழ் குறிப்பாக ஏற்புடையதானவிடத்து சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச அகதிகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆகியவற்றின் கீழ் உள்ள கடப்பாடுகளுக்கு அமைவாக இருப்பதையும் நாடுகள் மீள உறுதிப்படுத்த வேண்டும்.

2014 பெப்ரவரி 4ஆந் திகதியன்று விடுக்கப்பட்ட அரசாங்கங்களையும் சமயங்களையும் சேர்ந்தவர்களின் உயிரிழப்பும் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றி அரசாங்கத்தினால் விடுவிக்கப்பட்ட ஏற்பு அறிவித்தலும் வரவேற்கப்படுகின்றது.

பிறவற்றுள் தனியாள் வழக்குத் தொடுப்புக்கள், ஈடுசெய்தல்கள், உண்மைத் தேடல், நிறுவன ரீதியான சீர்திருத்தம், அரசாங்க பணியாளர்களினதும் உத்தி யோகத்தர்களினதும் விசாரணை செய்தல், அல்லது பிறவற்றுள் பொறுப்புக்கூறல் உறுதிப் படுத்துவதற்கும் நீதியை வழங்குவதற்கும் மோசமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் காயத்தை ஆற்றுவதற்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் பாதுகாப்பு முறையின் சுதந்திரமான மேற்பார்வைக்கும் அரசாங்க நிறுவனங்களில் நம்பிக்கையை மீட்டெடுப்பதற்கும் வன்செயல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களின் மீள்நிகழ்வைத் தடுக்கும் நோக்கத்துடன் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு அமைவாக சட்ட ஆட்சியை ஊக்குவிப்பதற்குமாக நீதி மற்றும் நீதியல்லாத முழுமையான நடவடிக்கைகளை ஒன்றிணைத்து கடந்த காலத்துடன் கையாளுவதற்கான அகல் விரிவான அணுகுமுறையொன்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன் இத்தொடர்பில் சகல பங்குதாரர்களுடன் கலந்துரையாடலும் பரந்த அளவிலான உசாவுதல்களும் உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ள பொறுப்பு வரவேற்கப்படுகின்றது.

கடந்தகால துஷ்பிரயோகங்களுக்கும் வன்செயல்களுக்கும் நிவர்த்தி வழங்குவதற்கான பொறிமுறைகள் சுதந்திரமானவைகளும் பாரபட்சமற்ற வைகளுமாகவுமிருக்கும். அவை தொழில்சார் திறமைகளையும் முழுமையையும் பாரபட்சமின்மையையும் அதியுயர் அளவில் காண்பிக்கின்ற நபர்களினால் நடாத்தப்படுமிடத்தும் அவை பாதிக்கப்பட்டவர்கள், பெண்கள், இளைஞர்கள், பல்வேறு சமயங்கள், இனங்கள், புவியியல் அமைவிடங்களை சேர்ந்தவர்களையும் உள்ளடக்கியும் அவர்களுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாதவர்களையும் ஓரங் கட்டப்பட்ட தொகுதியினர்களையும் உள்ளடக்கப்படுகின்றதுடன் இவை இயைபுள்ள சர்வதேச மற்றும் உள்நாட்டு அனுபவத்தையும் கொண்டவர்களின் நிபுணத்துவ ஆலோசனையின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
வன்முறைச் செயல்களுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் மிகவும் பொறுப்பாகவிருந்தவர்களுக்கு எதிரான நம்பகத்தன்மை வாய்ந்த பொறுப்புக்கூறல் நடைமுறையை மேற்கொள்வதும் இராணுவத்தினர்களுக்குள் கௌரவத் துடனும் தொழில்சார் திறனுடன் பொறுத்தமான முறையில் தங்களை நடாத்திக்கொண்டவர்களின் நற்பெயரை பாதுகாக்கும்.

தண்டனையிலிருந்து விலக்களித்தலை முடிவுக்கு கொண்டுவரும் நோக்குடன் சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றங்களை உள்ளடக்கியுள்ள சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் மனித உரிமைகளின் முழுமையான மீறல்களுக்கும் பொறுப்புள்ளவர்களுக்கு எதிராக வழக்கு தொடருவதற்கான தங்களுடைய பொறுப்புக்களைக் கடைப்பிடிப்பதற்கான நாடுகளின் பொறுப்பு நினைவு கூறப்படுகின்றது.

அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களின் மீளாய்வைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு உரிமையுடைய சிவில் சொந்தக்காரர்களுக்கு காணிகளை திருப்பி வழங்குவதற்கும் சீவனோபாயங்களை உள்நாட்டு மக்கள் ஆரம்பிப்பதற்கும் வழக்கமான சிவில் வாழ்க்கையை அவர்கள் திரும்பவும் மேற்கொள்வதற்கும் ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை கவனத்திற் கொள்ளப்படுகிறது. அரசியல் அதிகாரத்தைப் பகிர்வதற்கான இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பேற்புகளும் வரவேற்கப்படுகின்றன.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் செய்யப்பட்டுள்ள ஆக்கப்பூர்வமான சிபாரிசுகளை விளைபயனுள்ள முறையில் நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்திற்கு கோரிக்கை விடப்படுகின்றது.

**தொடரும்...**

**சுழியோடி**

# மதவாதிகளின் மதப்பரம்பலை கட்டுப்படுத்துங்கள்

## - சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் -



சிவன் கோயில் சைவ நிகழ்ச்சிக்கு யார் வரலாம் யார் வரக்கூடாது என்பதைச் சைவர்களே தீர்மானிப்பார்கள். கத்தோலிக்க பாதிரியாரோ கிறித்தவப் பாதிரியாரோ அல்ல. நல்லூர் சிவன் கோயிலிலும் அடுத்துள்ள சைவ மண்டபத்திலும் நடக்கின்ற சூரியனுக்கு நன்றி சொல்கின்ற பொங்கல் விழாவில் இலங்கைக் குடியரசுத் தலைவர் கலந்து கொள்கிறார். சூரியனை வழிபடுகின்றவர்கள் சாத்தானை வழிபடுகின்றார்கள் என்கின்ற கத்தோலிக்க மற்றும் கிறித்தவப் பாதிரிமார்கள் சைவர்களின் பொங்கல் விழாவில் யார் கலந்து கொள்ளலாம் கலந்து கொள்ளக் கூடாது என்று தீர்மானிக்க முடியாது.

சிவன் கோயிலில் நடக்கும் விழாவில் குடியரசுத் தலைவர் கால் வைக்கக் கூடாது என்று கூறும் உரிமை கத்தோலிக்க மற்றும் கிறித்தவப் பாதிரியார்களுக்குக் கிடையவே கிடையாது. மடுமாதா கோவிலுக்கு குடியரசுத் தலைவர் வந்தபொழுது சைவர்கள் எதிர்க்கவில்லை. மன்னார் ஆயர் அண்மையில் குடியரசுத் தலைவரைச் சந்திக்கச் சென்றபொழுது சைவர்கள் எதிர்க்கவில்லை. சைவ விழாவிற்கு வருகின்ற குடியரசுத் தலைவரைக் கத்தோலிக்க பாதிரியார் கால் வைக்கக்கூடாது என்று கூறுகின்ற கொடுமையை இலங்கையிலேயே பார்க்க முடியும்.

கத்தோலிக்கரும் கிறித்தவரும் குடியரசுத் தலைவரோடு நல்லிணக்கமாக அன்பாக உறவாடி வருகிறார்கள். சிவன் கோயிலுக்கு வருகிறார் சைவ மண்டபத்திற்கு வருகிறார் சைவக் கடவுளான சூரியனைப் போற்றுகின்ற விழாவில் கலந்து கொள்கிறார் சூரியனுக்கு நன்றி சொல்கின்ற விழாவில் கலந்து கொள்கின்றார் என்றதுமே கத்தோலிக்கப் பாதிரியார் போர்த்துக்கேய ஆக்கிரமிப்பு எண்ணத்துடன் பரங்கிகளின் வழிவழிக் கொள்கையை முன்னெடுக்கிறார்.

போர்த்துக்கேயர் எப் பொழுதோ போய்விட்டார்கள். ஒல்லாந்தர் எப்பொழுதோ போய்விட்டார்கள். ஆங்கிலேயர் எப்பொழுது போய்விட்டார்கள். இலங்கை சிவ பூமி. சைவர்களின் விழாக்களில் யார் கலந்து கொள்ளலாம் கலந்து கொள்ளக் கூடாது என்பதைச் சைவர்களே தீர்மானிக்க வேண்டும். சைவ விழாவுக்கு யார் வரலாம் யார் வரக்கூடாது என்பதைச் சூரியன் வழிபாடு சாத்தான் வழிபாடு என்கின்ற கத்தோலிக்கப் பாதிரியாரோ கிறித்துவப் பாதிரியாரோ தீர்மானிக்க முடியாது.

அவ்வாறு தீர்மானிக்க முயன்றால் சைவர்கள் கைகட்டி வாய்பொத்திப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். சிவ சேனையில் உள்ள நாம் அவ்வாறு கூறிய கத்தோலிக்கப் பாதிரியாரை வன்மையாகக் கண்டிக்கிறோம். போதைப்பொருள் கும்பலின் தலைவன் அல்லது தலைவி யாழ்ப்பாண மாவட்டச் செயலாளராக வர முடியுமா? மதமாற்றக் கும்பலின் தலைவன் அல்லது தலைவி யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளராக வர முடியுமா? போதைப் பொருள் கும்பலுக்கும் மதமாற்றக் கும்பலுக்கும் வேறுபாடு இல்லை. இரண்டுமே யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோரத் தாண்டவம் புரிகின்றன.

இந்தச் சூழ்நிலையில் இலங்கை அரசு திரு.அம்பலவாணர் சிவபாலசிங்கம் அவர்களை மாவட்ட செயலாளராக்கியதைச் சைவர்கள் ஆகிய நாங்கள் ஆரவாரத்துடன் வரவேற்கிறோம். கொழும்பு அரசுக்கு நன்றி சொல்கிறோம். போதைப் பொருள் கும்பல்களையோ மதமாற்றக் கும்பல்களையோ ஆட்சியில் அதிகாரத்தில் நிர்வாகத்தில் விடக்கூடாது என்பதில் சிவசேனையில் உள்ள நாங்கள் மிகத் தெளிவாக செயல்படுகிறோம்.

மார்கழி 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை (30.12.2023) அன்று சிவசேனை, உருத்திர சேனை மற்றும் சைவ அமைப்புகள் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டத்திற்குச் செவி சாய்த்த கொழும்பு அரசுக்கு இலங்கைச் சைவர்களின் நன்றி. ஆர்ப்பாட்ட நிகழ்ச்சியை உலகிற்கு அறிவித்த அச்சு ஊடகத்தார், மின் ஊடகத்தார், சமூக ஊடகத்தார் அனைவருக்கும் சைவ மக்களின் நெஞ்சார்ந்த நன்றி.

55,000 சைவர்கள் 58% தோராயமாக, 35,000 கிருத்தவர்கள் 37% தோராயமாக, 4,500 முகமதியர்கள் 5% தோராயமாக, 20 புத்தர்கள் யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் வாழ்வோர் தொகை 95,000 தோராயமாக அதில் சமயிகள் பகுப்பு ஆண்டுதோறும் யாழ்ப்பாண மாநகர சபைக்குரிய வருவாயில் கணிசமான தொகையாக ரூபா 10 கோடி வரை நல்லூர் அருள்மிகு வள்ளி தேவயானை உடனுறை முருகன் கோயில் ஆண்டுத் திருவிழாவை ஒட்டிய நிகழ்வுகள் தருபவையே.

யாழ் மாநகர சபை முதல்வராக ஆர்னோல்டர். கத்தோலிக்கர். நல்லூர் திருவிழாக் காலத்தில் அவர் ஜேர்மனியிலிருந்தமையும் வரலாறு. யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவின் அனைத்து நிலதாரி பிரிவுகளும் நல்லூர் பிரதேச செயலக பிரிவின் நிலதாரிப் பிரிவுகளுள் பாதியுமாக தோராயமாக 40 நிலதாரிப் பிரிவுகள் யாழ் மாநகர சபை எல்லைக்குள். நந்திக் கொடியே நல்லூர் அரசின் கொடி. ஆறுமுக நாவலர் காலத்தில் பிரிட்டோவை எதிர்த்து இராநாதனை வேட்பாளராக முன்மொழிந்தார். யாழ்ப்பாணம் சிவ பூமி. 400 ஆண்டுகளுக்கு முன்பு கத்தி முனையில் வாள் முனையில் துப்பாக்கி முனையில் கிறித்தவர் ஆயினர் சைவர்களுட் சிலர்.

அக்காலத்தில் கிறித்தவ மேலாட்சியில் சைவர்கள் நலிந்தனர். கிறித்தவ ஆட்சிக் காலத்தில் கிறித்தவர்களாகிய நீங்கள் கோலோச்சினீர்கள். கிறித்தவரிடமிருந்து விடுதலை பெற்ற பின்பும் சைவர்கள் தங்கள் நிலத்தில் சிவ பூமியில் கோலோச்ச முடியவில்லை எனில் விடுதலையின் பொருள் என்ன? அப்பொழுது துப்பாக்கி முனையில் அரசாட்சி கிறித்தவர் கையில். இப்பொழுதும் அரசாட்சி கிறித்தவருக்கு வேண்டுமா? எத்தனையோ நாடுகளில் எத்தனையோ நகரங்களில் உள்ளூராட்சியில் மாநகர சபையில் முதல்வராகக் கிறித்தவர்கள் இருக்கிறார்கள். சைவ சமயிகள் யாழ்ப்பாணத்தை விட்டால் வேறு எங்கு போக முடியும்?

சைவர்களுடைய நிலத்தில் பூமியில் நகரத்தில் சைவர்கள் ஆட்சி, சைவர்களின் தலைமை. பெரும்பான்மை எண்ணிக்கையில் சைவர்களைக் கொண்ட யாழ் மாநகர சபையில் சைவ சமயியே முதல்வராகுக. வேறு எந்த சமயத் திருவிழாவிலும் கிடைக்காத கணிசமான வருவாய் கிடைக்கும் நல்லூர்த் திருவிழாவில் பங்கேற்கச் சைவ சமயியே மாநகர சபை முதல்வராகுக.



# பிராந்திய செய்திகள்

## 'மருதமுனை சமாதான நீதிபதிகள்' நூல் வெளியீடு



ஊடகவியலாளர் மருதமுனை நபாயில் எழுதிய மருதமுனை ஆவணக்காப்பகத்தின் வெளியீடான 'மருதமுனை சமாதான நீதிபதிகள்' நூல் வெளியீடு சனிக்கிழமை (28-01-2023) காலை 9.00 மணிக்கு மருதமுனை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் ஏ.பீ.எம்.மரைக்கார் நினைவரங்கில் நடைபெறவுள்ளது.

கல்முனை வடக்கு முஸ்லிம் சமாதான நீதிபதிகள் சங்கத்தின் தலைவரும், ஓய்வு நிலை வருமான வரி மதிப்பீட்டாளரும், பிரசித்த நொத்தாரிசுமான சமாதான நீதிபதி ஏ.எல்.எம்.முனாஸ் தலைமையில் இந்த விழா நடைபெறவுள்ளது.

இதில் பிரதம அதிதியாக யாழ்ப்பாணம், வட மாகாணத்திற்கான குடியியல், மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி தாவூத்லெப்பை அப்துல் மனாப் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ அதிதிகளாக அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை தொழில் நியாமன்றின் தலைவரும், மேலதிக நீதிவானுமாகிய வி.எம்.சியான், பொத்துவில் நீதிவான் நீதிமன்ற மாவட்ட நீதிபதியும் நீதிவானுமாகிய ஏ.சி.றிஸ்வான், அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதியும், நீதிவானுமாகிய எம்.எச்.எம்.ஹம்ஸா மற்றும் சிறப்பு அதிதியாக ஓய்வு நிலை அதிபர் ஏ.ஆர்.அப்துல் றாசிக் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

## மீசாலை பன்றிக்கேணி கந்தசுவாமி கோயில் மஹா கும்பாபிஷேகம்



மீசாலை பன்றிக்கேணி கந்தசுவாமி கோயில் தொன்மை வாய்ந்த ஆலயமாகும். இப்போது புனருத்தாரனம் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் தைத்திருநாளில் 13, 2023 (27.01.2023) நடைபெறவுள்ளது.

கர்மாரம்பம்: 25 – 01– 2023 புதன் கிழமை காலை: 5:30 மணிக்கு

பால்க்காப்பும் எண்ணெய்க்காப்பும்: 26–01–2023 வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 வரை.

மஹா கும்பாபிஷேகம் : 27– 01 – 2023 வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் 11.02 வரை நடைபெற்று மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

சுமார் ஒன்றரை நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த பன்றிக்கேணியின் வேலானது கதிர்காமத்திலிருந்து தாண்டவர் என்ற சைவப் பெரியாரினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கதிர்காம ஆடி திருவோணத்தில் கதிர்காமத்தினையொட்டி தீர்த்தோற்சவம் இவ் ஆலயத்தில் நடைபெறுகின்றது.

தாண்டவர் சமாதியானது இவ் ஆலயத்தின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ளமை இக்கோயிலின் வரலாற்று தொன்மையினை எடுத்துரைக்கின்றது. சமாதிகள் உள்ள தேவஸ்தானங்கள் அதிக சக்தி வாய்ந்ததாக வரலாற்றிலிருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது.

அமைவிடம்: மீசாலை பன்றிக்கேணி கோயில் A9 வீதியில் மீசாலை – ஜயா கடைக் சந்தியிலிருந்து 3 நிமிட நடைப் பயண தூரத்தில் இவ் ஆலயம் அமைந்துள்ளது.

## நாட்டில் வேகமாகப் பரவும் டெங்கு – கொழும்பு மக்களுக்கு எச்சரிக்கை

இம்மாதம் இரண்டாவது வாரத்தில் 2,030 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. 09 முதல் 15 வரை இந்த டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக அந்த பிரிவு தெரிவித்துள்ளது. குறித்த காலப்பகுதியில் கொழும்பு மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள நிலையில் அதன் எண்ணிக்கை 452 ஆகும்.

மேலும், கம்பஹா மாவட்டத்தில் 417, புத்தளம் மாவட்டத்தில் 257, களுத்துறை மாவட்டத்தில் 123, அம்பாறை மாவட்டத்தில் 107 மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 103 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இந்த வருடம் இதுவரை 4,172 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

## மதுபானம் வாங்குவோருக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

நாட்டில் மதுபானம் வாங்குவோருக்கு முக்கிய அறிவித்தலை இலங்கை மதுவரித் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

மதுபானசாலைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள மதுபான போத்தல்களில் போலியான ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருப்பது தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

குறித்த நடவடிக்கை தொடர்பில் ஆராய்வதற்காக மதுவரித் திணைக்களம் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

மதுபான வர்க்கத்தின் தரம் உள்ளிட்ட விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக இந்த ஸ்டிக்கர் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

எனினும் அவ்வாறான ஸ்டிக்கர்கள் போலியான வகையில் ஒட்டப்படுகின்றமை சட்டத்துக்கு முரனானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## பஸ் விபத்தில் 7 பேர் உயிரிழப்பு, பலர் காயம்

நானு ஓயாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் பஸ்ஸில் பயணித்த 41 பாடசாலை மாணவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்தவர்களில் வேனில் பயணித்த 6 பேரும், முச்சக்கர வண்டியில் பயணித்த ஒருவருமே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த பஸ் பள்ளத்தில் வீழ்ந்திருப்பதால், மீட்பு நடவடிக்கையை மேற்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா - நானு ஓயா பிரதேசத்தில் கடந்த (20) இரவு வாகன விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது. கொழும்பில் உள்ள பாடசாலை ஒன்றின் மாணவர்கள் சுற்றுலா சென்ற பஸ் ஒன்று, வேனும் ஒன்றுடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முட்டை தட்டுப்பாட்டிற்கு ஜூன் மாதத்திற்குள் முடிவு



முட்டை தட்டுப்பாடு ஜூன் மாதத்திற்குள் முடிவுக்கு வரும் என்று வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலாளர் பிரியங்கா அத்தபத்து தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நாளாந்தம் 3 மில்லியன் முட்டைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வெள்ளை முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 44 ரூபாவாகவும், சிவப்பு முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 46 ரூபாவாகவும் கடந்த (20) முதல் அமுலுக்கு வரும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.


## உயர்தரப் பரீட்சை இடம்பெறும் காலத்தில் மின்வெட்டு அமுல்படுத்தப்படமாட்டாது

இந்த ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை இடம்பெறும் காலத்தில் மின்வெட்டு அமுல்படுத்தப்படமாட்டாது என அதிகாரிகள் அறிவித்துள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. தமது திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, மின்சார சபை அதிகாரிகள் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறவுள்ளது. அதற்காக 331,709 பாடசாலை மற்றும் தனியார் விண்ணப்பதாரர்கள் தோற்றவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் 2,200 நிலையங்களில் பரீட்சையை நடாத்துவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். இதேவேளை, உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளின் போது உயர்தரப் பரீட்சையை இடையூறு இன்றி நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சினி துளிகள்





## மீண்டும் கதாநாயகனாக கவுண்டமணி

தமிழ் சினிமாவில் 80 மற்றும் 90 காலக்கட்டங்களில் தனக்கே உரிய நகைச்சுவை பாணியின் மூலம் ரசிகர்கள் மத்தியில் இடம் பிடித்தவர் நடிகர் கவுண்டமணி.

இவர் கடைசியாக கடந்த 2016-ஆம் ஆண்டு வெளியான "எனக்கு வேறு எங்கும் கிளைகள் கிடையாது" படத்தில் நடித்திருந்தார். இதைத்தொடர்ந்து 6 வருடங்களுக்கு பிறகு தற்போது மீண்டும் கவுண்டமணி நடிப்பில் இறங்கியுள்ளார்.

அறிமுக இயக்குனர் செல்வ அன்பரசன் இயக்கத்தில் கவுண்டமணி நடிக்கவுள்ள திரைப்படம் "பழனிச்சாமி வாத்தியார்". இந்த படத்தில் யோகி பாபு, கஞ்சா கருப்பு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.

வேலம்மாள் சினி கிரியேஷன்ஸ் தயாரிக்கும் இப்படத்தின் பூஜை நடைபெற்றுள்ளது. இதன் படப்பிடிப்பு அடுத்த மாதம் துவங்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.



## இணையத்தை கலக்கும் தனுஷ் பட பாடல்

தெலுங்கு இயக்குனர் வெங்கி அட்லூரி இயக்கத்தில் நடிகர் தனுஷ் நடிப்பில் உருவாகி வரும் திரைப்படம் "வாத்தி". பிரபல தயாரிப்பாளர் நாக வம்சி தயாரித்து வரும் இப்படம் நேரடியாக தெலுங்கிலும் வெளியாகவுள்ளது.

இப்படத்திற்கு தெலுங்கில் "சார்" என்றும், தமிழில் "வாத்தி" என்றும் தலைப்பு வைக்கப்பட்டிருக்கிறது.

சம்யுக்தா மேனன் கதாநாயகியாக நடிக்கும் இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைக்கிறார். சமீபத்தில் வெளியான இப்படத்தின் முதல் பாடல் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. சில தினங்களுக்கு முன்பு இப்படத்தின் இரண்டாவது பாடலான "நாடோடி மன்னன்" பாடல் வெளியாகி இணையத்தில் வைரலானது.

இந்நிலையில் "நாடோடி மன்னன்" பாடல் 4 மில்லியன் பார்வையாளர்களை கடந்து 1 லட்சம் லைக்குகளை பெற்று இணையத்தில் பலரின் கவனத்தை ஈர்த்து வருகிறது. இதனை இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் போஸ்டர் வெளியிட்டு தெரிவித்துள்ளார். "வாத்தி" திரைப்படம் வருகிற பெப்ரவரி 17-ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தனி ஒருவன்-2 குறித்து ஜெயம் ரவி

மோகன்ராஜா இயக்கத்தில் ஜெயம் ரவி நடிப்பில் கடந்த 2015ம் ஆண்டு வெளியான படம் "தனி ஒருவன்". இப்படத்தில் அரவிந்த் சாமி, நயன்தாரா, ஹரிஷ் உத்தமன், கணேஷ் வெங்கட்ராமன் உள்ளிட்டோர் நடித்திருந்தனர்.

பெரும் எதிர்ப்பார்ப்பில் உருவான இப்படம் ரசிகர்களின் ஆதரவைப் பெற்று விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் மாபெரும் வெற்றி பெற்றது. ரசிகர்கள் இப்படத்தின் இரண்டாம் பாகம் குறித்து சமூக வலைத்தளத்தில் அவ்வப்போது கேட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தனி ஒருவன் படத்தின் இரண்டாம் பாகம் குறித்த ஜெயம் ரவி பேசியுள்ளார். அதில், தனி ஒருவன் படத்தின் இரண்டாம் பாகத்திற்கான கதை தயாராகிவிட்டதாகவும் பொன்னியின் செல்வன் படத்திற்கு முன்னரே தனி ஒருவன் இரண்டாம் பாகத்தை உருவாக்க திட்டமிட்டதாகவும் தெரிவித்தார். ஆனால் தானும், சகோதரர் ராஜாவும் அவரவர் பணியில் கவனம் செலுத்தி வருவதால், பணிகள் முடிந்த பிறகு இருவரும் தனி ஒருவன் படத்தில் இணைவோம் என ஜெயம் ரவி கூறியுள்ளார்.







## வெளியாகும் ஹன்சிகா திருமண விடியோ

நடிகை ஹன்சிகாவின் திருமண விடியோ பிரபல ஓடிடி தளத்தில் வெளியாகவுள்ளது.

நடிகை ஹன்சிகா தமிழில் 'எங்கேயும் காதல்', 'ஒரு கல் ஒரு கண்ணாடி' படத்தின் மூலம் பிரபலமடைந்தார். அதன்பின் 'பிரியாணி', 'சிங்கம் 2' உள்ளிட்ட படங்களில் நடித்தார்.

மேலும், தமிழ் மற்றும் தெலுங்கில் சில படங்களில் நடித்து வருகிறார்.

ஹன்சிகா தொழிலதிபர் சோகேல் என்பவரை டிசம்பர் 4 ஆம் திகதி ஜெய்பூர் அரண்மனையில் பிரம்மாண்டமாக திருமணம் செய்துகொண்டார்.

இந்நிலையில், இவர்களின் திருமண விடியோ 'லவ் ஷாதி டிராமா' என்கிற பெயரில் டிஸ்னி ஹொட்ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியாக உள்ளதாக ஹன்சிகா தெரிவித்துள்ளார்.



## "பொம்மை நாயகி" - வெளியானது இரண்டாவது பாடல்

இயக்குனர் பா.ரஞ்சித்தின் நீலம் புரொடக்சன்ஸ் மற்றும் யாழி பிலிம்ஸ் இணைந்து தயாரித்துள்ள திரைப்படம் "பொம்மை நாயகி". இயக்குனர் ஷான் எழுதி, இயக்கியுள்ள இந்த படத்தில் முன்னணி காமெடி நடிகர் யோகி பாபு கதாநாயகனாக நடித்துள்ளார். இந்த திரைப்படத்திற்கு கே.எஸ் சுந்தர மூர்த்தி இசையமைக்க, அதிசயராஜ் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

சமீபத்தில் இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் முதல் பாடல் வெளியாகி கவனம் பெற்றது. இதையடுத்து இப்படத்தின் இரண்டாவது பாடலான "கடற்கர காத்து வீசுதே" பாடல் வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்த நிலையில், இப்படத்தின் பாடல் வெளியாகி சமூக வலைதளத்தில் கவனம் ஈர்த்து வருகிறது.




## சுந்தர்.சியின் அரண்மனை 04

சுந்தர்.சி இயக்கத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் "அரண்மனை 3". இந்த படத்தில் ஆர்யா, ராஷி கன்னா, ஆண்ட்ரியா, சாக்ஷி அகர்வால் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர். அவ்னி சினிமேக்ஸ் நிறுவனம் சார்பில் குஷ்பு தயாரித்திருந்த இப்படத்தை உதயநிதி ஸ்டாலின், ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் வெளியிட்டது.

இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில், இயக்குனர் சுந்தர் சி "அரண்மனை 4" படத்தை இயக்க தயாராகி வருகிறாராம். இதற்கான வேலைகளில் சுந்தர் சி இறங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், இந்த படத்தில் விஜய் சேதுபதி கதாநாயகனாக நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், இதுவரை இந்த படம் குறித்து எந்தவிதமான அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் இணையும் ராட்சசன் கூட்டணி

இயக்குனர் செல்லா அய்யாவு இயக்கத்தில் நடிகர் விஷ்ணு விஷால், ஐஸ்வர்யா லட்சுமி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்த திரைப்படம் "கட்டா குஸ்தி".

இப்படம் கடந்த டிசம்பர் 2-ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

இதைத்தொடர்ந்து தற்போது விஷ்ணு விஷால், சத்திய ஜோதி பிலிம்ஸ் நிறுவனம் தயாரிப்பில் "ராட்சசன்", "முண்டாசுப்பட்டி" போன்ற படங்களை இயக்கி கவனம் பெற்ற இயக்குனர் ராம் குமார் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடிக்கவுள்ளார்.

இதனை விஷ்ணு விஷால் தனது சமூக வலைதளத்தில் புகைப்படங்களை வெளியிட்டு அறிவித்துள்ளார்.

இயக்குனர் ராம் குமார் மற்றும் விஷ்ணு விஷால் கூட்டணியில் 2018 ஆம் ஆண்டு வெளியான "ராட்சசன்" திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றதையடுத்து இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

04

இயற்கையின் பேரனர்த்தத்தில் (சுனாமி) இருந்து மக்களை மீள் கட்டமைக்கும் செயற்பாடுகள் விடுதலைப்புலிகளால் கிழக்கிலும் முல்லைத்தீவிலும் யாழ்ப்பாணத்திலும் சிறப்புற மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கான நிர்வாக அலகுகள் திறம்பட செயற்படுகின்றன. விடுதலைப்புலிகளை அனைத்து கட்டமைப்புகளும் மக்கள் மீள் கட்டுமான பகுதிகளில் ஈடுபடுத்தப்படுகின்றன. உலக நாடுகளிடமும் புலம்பெயர்ந்த மக்களிடமும் இருந்து கிடைத்த உதவிகளை பெற்று மக்களுக்கு சென்றடைய விடுதலைப்புலிகள் நிர்வாகங்களை உருவாக்குகின்றார்கள்.

இதேவேளை சமாதான செயலகத்தால் சுனாமி மீள்கட்டுமான செயற்குழு உருவாக்கப்படுகின்றது. இதனூடாக உலக நாடுகளில் இருந்து கிடைக்கும் பொருட்கள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இந்த சுனாமியால் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி மக்களுக்கு தேவையான பொருட்கள் வன்னிக்கு எடுத்துவரப்பட்ட அதே வேளை விடுதலைப்புலிகளுக்கு தேவையான பொருட்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. குறிப்பாக பெறுமதி மிக்க இலத்திரனியல் பொருட்கள் தொலைத்தொடர்பு பொருட்கள் ஏன் விமான உதிரிப்பாகங்கள் கூட கொள்வனவு செய்து இறக்கும் போது பிடிபட்டு இருந்த செய்தியும் நீங்கள் அன்று அறிந்திருப்பீர்கள். இவ்வாறு திருகோணமலை மாவட்டத்திற்கும் விடுதலைப்புலிகள் தமக்கு தேவையான பொருட்களையும் தருவித்து கொள்கின்றார்கள். இவற்றுள் நீண்டகாலம் வைத்திருக்கக்கூடிய மருந்து பொருட்கள் முதன்மையாக அடங்குகின்றன. அதற்கான இடங்கள் இனம்காணப்பட்டு மருத்துவ பிரிவு மருத்துவமனைகளை அங்கு அமைக்கிறார்கள். இதனிடையே திருகோணமலையில் வெளிநாட்டு மருத்துவ அணிகள் வந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் சென்று மக்களுக்கு சிகிச்சை அளிக்கிறார்கள். இதுவொரு புலனாய்வு நடவடிக்கை என்று தெரிந்திருந்த போதும் மக்களுக்கு மருந்து சேவை அவசியமாக தேவைப்பட்டதால் விடுதலைப்புலிகள் இது தொடர்பான அவதானத்துடன் அவர்களின் சேவைக்கு அனுமதி வழங்கியிருந்தார்கள். எனினும் ஒரு சில தமிழ் மக்கள் மூலமே தங்களுக்கு தேவையான புலனாய்வு தகவல்களை அவர்கள் திரட்டிக்கொண்டு இருந்தார்கள் என்பதை பின்னர் அறியமுடிந்தது.

இவர்களது நடவடிக்கை இவ்வாறு இருக்கையில் விடுதலைப்புலிகளும் திருமலை மாவட்டத்தில் இருந்து கொண்டு இலங்கையின் தென்பகுதிக்கான நடவடிக்கைகள் விடுதலைப்புலிகள் புலனாய்வு பிரிவினரால் திட்டமிடப்படுகின்றன. இலங்கையின் தலைநகரான கொழும்பு மற்றும் சுற்றுப்புற இடங்களில் தாக்குதல் நடத்துவது இராணுவ அரசியலில் முதன்மையானவர்களை இனம் கண்டு அவர்களின் இருப்பிடங்களை கண்டறியும் ஒரு பிரிவும் இவ்வாறு தமிழ் மக்களுக்கு துரோகம் இழைக்கும் முதன்மையானவர்களை கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு பிரிவு அதிலும் கரும்புலி அணிகள் இவற்றுக்கு எல்லாம் திருகோணமலை ஊடாகவே வெடிபொருட்களை கடத்தும் அணிகளின் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இதற்கிடையில் வன்னியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளிலும் கிழக்கிலும் பல்வேறு இராணுவ நடவடிக்கைகளை அதாவது ஊடுருவல் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவதில் படையினருக்கும் பல்வேறு தகவல்களை வழங்கி வந்த வரும் விடுதலை போராட்டத்திற்கு பெரும் தடைகற்களாக இருந்தவருமான புளொட் மோகன் என்று அழைக்கப்படும் கந்தையா யோகராசா என்பவர் கொழும்பில் வைத்து பிஸ்ரல் குழுவினரால் ஏற்கனவே சுட்டுக்கொல்லப்பட்டு இருந்தார். சிறிலங்காவில் வன்னி மற்றும் மட்டக்களப்பு திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்ட பல ஊடுருவி தாக்குதல்களுக்கும் விடுதலை போராட்டத்திற்கு ஆதரவானவர்கள் சுட்டுக்கொல்லப்படுவதற்கு பின்னால் மட்டுமல்ல கருணா விடுதலை போராட்டத்திற்கு துரோகம் இழைத்து இயக்கத்தை விட்டு வெளியேறிய போது கருணாவிற்கு பாதுகாப்பு அழிப்பது உட்பட கருணாவின் பல நடவடிக்கைகளுக்கு பின்னே இந்த புளொட் மோகன் இருந்ததால் கொழும்பின் உச்ச பாதுகாப்பு பகுதியில் வைத்து 31.07.2004 அன்று பிஸ்ரல் குழுவினர் அவரை சுட்டுக்கொன்றிருந்தனர்.

எனினும் அதன் பின்னரும் விடுதலை போராட்டத்திற்கு ஆதரவானவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல்கள் சில மாதங்களில் ஏற்பட்ட சுனாமி காரணமாக சற்று ஓய்ந்திருந்தது. எனினும் அது அதிக காலம் நீடிக்கவில்லை மீண்டும் சிறிலங்கா படை புலனாய்வாளர்களால் ஒட்டு குழுக்களினதும் நடவடிக்கை தொடர தொடங்கியதும் அதற்கு எதிரான நடவடிக்கைகளில் மீண்டும் பிஸ்ரல் குழுவினர்கள் இதன் ஒரு கட்டத்தில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்மன் கதிர்காமரும் 2005 ஓகஸ்ட் 12இல் சுட்டுக்கொல்லப்பட்டார். இவ்வாறான களையெடுப்பு நடவடிக்கைகளுக்கு தளமாக கட்டளை பீடமாக திருகோணமலையே விளங்கியது. இதே வேளை கடலிலும் கடற்புலிகளுக்கும் சிறிலங்கா கடற்படைக்கும் இடையில் சில மோதல்கள் இடம்பெற்றன. எச்சரிக்கை அறிவிப்பாக போராளிகளால் டோற படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. இதனை தொடர்ந்து மீண்டும் சிறிலங்கா கடற்படையினரால் கடலில் மீன்பிடிக்க கடுமையான தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது. திருகோணமலையிலும் ஆழ்கடலிலும் சென்று தொழில் செய்ய முடியாத நிலைக்கு கடல்தொழிலாளர்கள் தள்ளப்பட்டனர்.

இத்துடன் பொருளாதார வாயனயல மக்கள் மீது திணிக்கப்படுகின்றது. பொருட்களுக்கு மீண்டும் கட்டுப்பாடு விதிக்கப்படுகின்றன. இவ்வாறான பிரச்சனைகளை தளர்த்துமாறு சிறிலங்கா படையினரிடம்



விடுதலைப்புலிகளால் கேட்கப்படுகின்றது. இதற்கு சம்மதிக்காத சிறிலங்கா அரசு மக்கள் மீது பல்வேறு கெடுபிடிகளை மேற்கொள்கின்றார்கள். சிறிலங்கா மீண்டும் போர் ஒன்றை முன்னெடுப்பதற்கு முனைப்புடன் செயற்படுகின்றது என்பதை சமாதான உடன்படிக்கைக்கு எதிரான இந்த செயற்பாடுகள் புரியவைத்தன. சிறிலங்காவின் இந்த போர் முனைப்பை பிரகாரம் தொடங்குகிறது. மாவிலாற்று பிரச்சனை சம்பூர் சேனையூர் ஈச்சிலம்பற்று புன்னையடி போன்ற விவசாயிகளின் இணக்கத்துடன் விடுதலைப்புலிகளால் சிங்கள கிராமத்துக்கு செல்லும் அணைமீது இடைக்கட்டு கட்டப்பட்டு ஆற்று நீர் சிங்கள மக்களுக்கு செல்லாமல் தடுக்கப்பட்டு முற்றிலுமாக தமிழ் மக்களின் செயற்பாட்டுக்கு விடப்படுகிறது.

**தொடரும்...**



# மகளிர் பக்கம்



## குளிர்காலத்துல கொத்துகொத்தா முடி கொட்டுமா?

சூடான நீர் குளியலிலிருந்து விலகி இருங்கள் வெப்பம் உங்கள் தலைமுடிக்கு தீங்கு விளைவிக்கும் மற்றும் முடி உதிர்வை ஏற்படுத்தும். குளிர்காலத்தில், நீங்கள் சூடான நீரில் குளிக்க விரும்பலாம். ஆனால் அவை உங்கள் தலைமுடிக்கு ஆரோக்கியமான விருப்பமல்ல. முடிந்தவரை சூடான நீரில் குளிப்பதைத் தவிர்க்க வேண்டும். உங்கள் தலைமுடியை சேதத்திலிருந்து பாதுகாக்க உங்கள் தலைமுடியை சுத்தம் செய்ய வெந்நீருக்கு பதிலாக வெதுவெதுப்பான நீரைப் பயன்படுத்தவும்.

கூந்தலுக்கு எண்ணெய் மசாஜ் செய்வது அவசியம் எண்ணெய் மசாஜ்கள் முடி வளர்ச்சியை ஊக்குவிக்கும் என்பதால் உங்கள் தலைமுடிக்கு சிறந்தது. உங்கள் உச்சந்தலையில் வாராந்திர மசாஜ் செய்வது இரத்த ஓட்டத்திற்கு உதவுகிறது மற்றும் முடியின் வளர்ச்சியை தூண்டுகிறது. இது முடியை வலுவாகவும் ஆரோக்கியமாகவும் மாற்றும். தேங்காய் எண்ணெய், ஆமணக்கு எண்ணெய், பாதாம் எண்ணெய் மற்றும் ஆலிவ் எண்ணெய் போன்ற முடி எண்ணெய்கள் முடி உதிர்வதைத் தடுக்கவும், உங்கள் தலைமுடிக்கு ஊட்டமளிக்கவும் சிறந்தவை.

சீவுவதற்கு முன் உங்கள் தலைமுடியை உலர வைக்கவும் ஈரமான முடி மிகவும் பலவீனமாக இருக்கும். பலவீனமாக இருக்கும் ஈரமான முடியை சீப்பினால் சீவினால், முடி உதிர்தலுக்கு அதிக வாய்ப்புள்ளது. குளிர்காலத்தில் முடியின் தண்டு பலவீனமாகவும் உடையக்கூடியதாகவும் இருப்பதால், உங்கள் முடி இன்னும் அதிகமாக உதிர வாய்ப்புள்ளது. எனவே, சீப்பைப் பயன்படுத்துவதற்கு முன்பு எப்போதும் உங்கள் தலைமுடியை காற்றில் உலர வைக்கவும்.

ஊட்டமளிக்கும் முடி தயாரிப்புகளைத் தேர்ந்தெடுக்கவும் குளிர்காலம் பொதுவாக மிகவும் வறண்டது. இது முடி மற்றும் உச்சந்தலையை உலர்த்தும். உலர்ந்த உச்சந்தலையில் பொடுகு மற்றும் அரிப்பு ஏற்படுகிறது. இது கட்டுப்பாடற்ற முடி உதிர்தலுக்கு வழிவகுக்கும். கூந்தலை ஈரப்பதத்துடன் வைத்திருக்க ஊட்டமளிக்கும் ஷாம்புகள், கண்டிஷனர்கள் மற்றும் ஹேர் மாஸ்க்குகளை பயன்படுத்துங்கள். கூந்தலுக்கு மிகவும் ஊட்டமளிக்கும் இயற்கை பொருட்களைப் பயன்படுத்துங்கள்.

தலைமுடியை அடிக்கடி அலச வேண்டாம் குளிர்காலம் மிகவும் வறண்டதாக இருப்பதால், வழக்கமான குளியல் உங்கள் முடியின் இயற்கையான ஈரப்பதத்தை அகற்றும். எனவே அடிக்கடி தலை குளிப்பதைத் தவிர்க்கவும். உங்கள் தலைமுடியை வாரத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை அலசுவது நல்லது. மற்ற நாட்களில், முடி மற்றும் உச்சந்தலையை சுத்தமாக வைத்திருக்க உலர்ந்த ஷாம்பூவைப் பயன்படுத்தவும்.



## ஞாபகம் இருக்கிறதா?

முதுகுக்கு பின்னால் என் பெயரை
எழுத நினைத்து தோற்றுப்போனது.........

கடற்கரை மணலில் என் பெயரை
எழுத நினைத்து தோற்றுப்போனது.......

முற்றத்து நிலவில் என் பெயரை
எழுத நினைத்து தோற்றுப்போனது........

கொட்டும் மழையில் என் பெயரை
எழுத நினைத்து தோற்றுப்போனது.........

ஓடும் ரயிலில் என் பெயரை
எழுத நினைத்து தோற்றுப்போனது........

ஆகாய வெளியில் என் பெயரை
எழுத நினைத்து தோற்றுப்போனது.........

மூடிய அறைக்குள் மூன்று மணி நேரம்
என் பெயரை எழுத நினைத்து
நீ......ஏங்கிப்போனது.........

-இரலியன்-



## காய்கறிகளை எப்படி சமைப்பதால் சத்து கிடைக்கின்றது?

காய்கறிகள் அதிகம் சாப்பிட்டால் எந்தவித நோயும் வராது என்று நமது முன்னோர்கள் கூறியிருக்கும் நிலையில் காய்கறியை சில வழிமுறைகளின்படி சாப்பிட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காய்கறிகள் தற்போது ரசாயன உரங்களால் விளைவிக்கப்படுவதால் காய்கறிகளை 20 நிமிடம் தண்ணீரில் ஊறவைத்து நன்றாக கழுவ வேண்டும். அப்போதுதான் அதன் தோலில் உள்ள பூச்சி மருந்துகளின் தாக்கம் விலகும் என்பது குறிப்பிடத்தக்கது

காய்கறிகளை நறுக்கியதற்கு பிறகு கழுவ கூடாது என்பதும் நறுக்கியதற்கு முன்பே கழுவி விட வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. நீர்சத்து மிகுந்த காய்கறிகளை ஐந்து நிமிடங்கள் மற்றும் வேக வைத்தால் போதுமானது

அதேபோல் காய்கறிகளை எண்ணெயில் வதக்கி சாப்பிட்டால் அதன் முழு சத்தும் கிடைக்காது. முட்டைக்கோஸ் தேங்காய் வெள்ளரிக்காய் தக்காளி கரட் இவற்றை சமைக்காமல் பயன்படுத்தினால் அதிக சத்துக்கள் கிடைக்கும்

சமைக்க வேண்டிய காய்கறிகளை தேவையான அளவு தண்ணீரில் வேக வைத்து அதன் பின் அந்த தண்ணீரை வீணாக்காமல் குடித்தால் உடலுக்கு மிகவும் நல்லது



## வாழைப்பழம் சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள்...!!

வாழைப்பழத்தில் எண்ணற்ற வகைகள் உள்ளன. செவ்வாழை, ரஸ்தாளி, கற்பூரவள்ளி, பூவன் பழம், பச்சைப்பழம், மலைப்பழம், பேயன் பழம், மொந்தம் பழம், மட்டி பழம், ஏலக்கி போன்ற வகைகளில் வாழைப்பழம் இருக்கிறது.

வாழைப்பழத்தில் வைட்டமின் ஏ, வைட்டமின் பி 6, வைட்டமின் சி, மக்னீசியம், நார்ச்சத்துக்கள் ஆகியவை நிறைந்துள்ளன. தொடர்ந்து பழுத்த வாழைப்பழம் சாப்பிட்டுவருவது ருமட்டாய்டு ஆர்த்தரைடீஸ், மன அழுத்தம் மற்றும் இதய நோய்கள் வரும் வாய்ப்புகளைக் குறைக்கிறது.

ஒரு பழுத்த வாழைப்பழத்தில் மனித உடலுக்கு சக்திவாய்ந்த எலும்புகளையும் தசைகளையும் உற்பத்தி செய்ய ஒரு நாளைக்குத் தேவைப்படும் பொட்டாசியத்தின் அளவில் 11 சதவிகிதம் உள்ளது.

தினமும் ஒரு பழுத்த வாழைப்பழத்தை சாப்பிட்டுவந்தால் இரத்த அழுத்தம், சிறுநீரகக் கற்கள், முழங்கால் வலி மற்றும் இதய நோய்கள் வராமல் தடுக்கும்.

இதைத் தவிர பழுத்த வாழைப்பழத்தை உண்டுவந்தால் உடலில் புற்று நோய் செல்கள் உருவாவதை தடுக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

பழுத்த வாழைப்பழம் கொண்டுள்ள சரியான அளவு ஆன்டி ஆக்சிடென்டுகள் சர்க்கரை நோய், இதய நோய்கள் மற்றும் வலிப்பு போன்ற நரம்பு அழற்சி குறைபாடுகளையும் கூடத் தடுக்கும்.

தினமும் பழுத்த வாழைப்பழம் உண்பதால் இதிலுள்ள அதிக நார்ச்சத்து ஆரோக்கியமான செரிமான மண்டலத்தை மேம்படுத்தும்.



## மன ஆரோக்கியம்

மன ஆரோக்கியம் ஒருவரின் உணர்ச்சி, உளவியல் மற்றும் சமூக நல்வாழ்வை குறிக்கின்றது. ஒரு நபரின் மன ஆரோக்கியம் அவர்களின் உடல் ஆரோக்கியத்தைப் போலவே முக்கியமானது.

மன அழுத்தம் மற்றும் கடினமான சூழ்நிலைகளை சமாளிப்பதற்கு மன ஆரோக்கியம் அவசியமாகின்றது.

மன அழுத்தத்தை நாம் எவ்வாறு கையாளுகிறோம், மற்றவர்களுடன் தொடர்புகொள்வது மற்றும் தேர்வுகள் செய்வது என்பதையும் தீர்மானிக்க மன ஆரோக்கியம் உதவுகிறது.


போதுமான தூக்கம் பெறுதல், மற்றவர்களுக்கு உதவுதல், மன அழுத்தத்தை நிர்வகிக்க புதிய சமாளிக்கும் திறன்களைக் கற்றல், மற்றவர்களுடன் இணைந்திருத்தல் போன்றவற்றின் மூலம் மன ஆரோக்கியத்தை பேணலாம்.

## உடல் ஆரோக்கியம்

உடல் ரீதியான ஆரோக்கியம் வாழ்க்கை முறையை அபாயம் இல்லாமல் அதாவது நோயில்லாமல் அமைத்துக் கொள்வதில் இருக்கிறது. உடல் ஆரோக்கியத்தை பேணுவதன் மூலமே நோயற்ற வாழ்வினை வாழ முடியும்.

முறையற்ற உணவுமுறை, உடல் உழைப்பு மற்றும் உடற் பயிற்சி இல்லாமை, உடல் பருமன், அதிக மன உளைச்சல், எதிலும் அவசரம், முறையான உறக்கம் இன்மை இவைகள் எல்லாம் பல்வேறு வியாதிகளுக்கு வித்திடுகின்றன.
சீரான உணவுப் பழக்க வழக்கம், உடற்பயிற்சி, உடலுக்கு சரியான ஓய்வு போன்றவற்றை கடைப்பிடிப்பதன் மூலம் உடல் நலம் பெறலாம்.

# ஜனாதிபதி ரணிலின் சூழ்ச்சி வலையில் சிக்கித்தவிக்கும் கட்சிகள்



துரியோதரன்

கடந்தவார தொடர்ச்சி...

ஆனால் தற்பொழுது கூறும் விடயம் என்னவெனில் நீங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஒன்றாகத்தான் இருக்கின்றீர்கள் ஒன்றாக இருப்போம் பிரிந்துசென்றுவாக்குகளைகேட்போம் பின்னர் மீண்டும் வாக்குகளை பெற்ற பின் ஒன்றாக இணைந்து நாங்கள் ஆட்சி அமைப்போம் என்று கூறுவது சிறுபிள்ளைத்தனமான ஒரு விடயமாக இருக்கின்றது. இதில் என்ன இராஜதந்திரம் இருக்கின்றது என்பது பற்றி பலரிடம் கேட்ட பொழுதிலும் இதில் எந்த இராஜதந்திரமும் இல்லை. ஏனென்றால் எந்தவொரு ஆயுத போராட்ட கட்சிகளும் இந்த தேர்தல் அரசியலை நம்பி வரவில்லை. தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமைகள் என்கின்ற கோட்பாடுகளை எதிர்பார்த்து வந்தவர்கள் தான் இந்த கட்சிகள் அனைத்தும். எனவே என்னத்திற்காக தற்பொழுது பிரிவினையை ஏற்படுத்தவேண்டும் என்று இவர்கள் நினைத்தார்கள் என்பது அவர்களுக்குகூட தெரியாத அளவிற்கு இருக்கின்றது.

தற்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய தலைவர் இரா.சம்பந்தன் அவர்களும் கூட நீங்கள் பிரிந்து சென்று செயற்படுங்கள் என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார். நாங்கள் பிரிந்து சென்றாலும் தமிழரசுக் கட்சி அதிக ஆசனங்களை கைப்பற்றும் பல உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றும் என்றும் தெரிவித்திருக்கின்றார். இதில் தமிழரசுக் கட்சிக்குள் வந்தேறிகள் எடுத்துக்கொண்ட இந்த முடிவு என்பது எந்த வகையிலே சாத்தியமாகும் அசாத்தியமாகும் என்பது பற்றி நாங்கள் பார்க்கவேண்டிய சூழல் உருவாகியிருக்கின்றது. சில விடயங்களை பார்க்கின்றபொழுது வடக்கு கிழக்கிலே தற்பொழுது களமிறங்கியிருக்கின்ற அரச தரப்பு சார்ந்த கட்சிகள் அனைத்துமே அவர்களும் போட்டியிட்டு தமக்கான உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றுவதற்கு மிக போட்டா போட்டியாக போட்டியிடப்போவது டக்ளஸ் தேவானந்தாவினுடைய ஈ.பி.டீ.பி கட்சி போட்டியிட இருக்கின்றது. இதில் பெரும்பாலும் ஈ.பி.டீ.பி கட்சி யாழ்ப்பாணத்திலே பல உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றும் திட்டத்தில் களமிறங்கும். அவ்வாறு இறங்கும் பொழுது ஈ.பி.டீ.பியுடன் இணைந்து தான் இவர்கள் ஆட்சியமைக்கவேண்டிய சூழல் தமிழரசுக் கட்சிக்கு உருவாகினாலும் உருவாகலாம். அதைவிட அவர்கள் அரசாங்கத்துடன் செயற்படுவது கூட சாலச்சிறந்ததொன்றாக இருக்கும்.

எனவே இவர்கள் ஆயுதம் தாங்கிய வன்முறையாளர்களுடன் இணைந்துசெயற்படுவதுஎமக்குபாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்ற காரணத்தினால் தான் இவர்கள் தற்பொழுது இவ்வாறான கருத்தாடலினால் பிரிந்துசென்றிருக்கின்றார்கள். இவ்வாறான பேராசையை வந்தேறிகளுக்கு விளங்கவில்லை. ஆனால் தமிழரசுக் கட்சியில் இருக்கின்ற மாவை சேனாதிராஜா, தவராசா போன்றவர்கள் இந்த உடைவை ஏற்படுத்தக்கூடாது என்பதிலே அவர்கள் பலதடவைகள் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் அந்த கருத்தாடல்களையும் மீறி குறிப்பாக சுமந்திரன், சிறிதரன் போன்ற அதிலிருக்கும் பலரது கருத்தாடல்களை உள்வாங்கிக் கொண்டு தனித்து செயற்படுவோம் என்ற முறையிலே இவர்கள் களமிறங்கியிருப்பது என்பது ஆபத்தானது.

சாணக்கியனுக்கு ஒரு சாணக்கியமான அரசியல் தெரியுமோ என்பது தெரியவில்லை. கிழக்கில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. முஸ்லிம்களின் பிரச்சினை, கருணா பிள்ளையான் போன்ற உறுதி கட்சிகளினது பிரச்சினை என இருக்க வேடிக்கையான நகர்வுகளை இவர்கள் நகர்த்துவதற்காக தமிழரசுக் கட்சி தற்பொழுது எடுத்திருக்கும் முடிவு என்பது பலரும் பிழை என கருதுகின்றார்கள். இதில் நாங்கள் ஒரு தீர்ப்பை கூறிவிட முடியாது. ஆனாலும் நாங்கள் கூறும் அனைத்து விடயங்களும் மக்களது கருத்தாடல்களாக இருக்கின்றது. மக்களது கருத்தாடல்களை உள்வாங்கித்தான் இதனுடைய விமர்சனங்களை நாங்கள் கூறுகின்றோம். ஆகவே இனிவரும் காலங்களில் இவர்கள் ஒற்றுமையாக இருப்பார்களா என நாங்கள் கேட்டால் இருப்பதற்கு வாய்ப்பில்லை என சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்ற கட்சித் தலைவர்களும் கூறுகின்றார்கள். இந்த கட்டத்திலே இவர்கள் எங்களுடன் செயற்படவில்லை எனில் இனி எப்படி பரந்துபட்ட அளவில் எங்களுடன் இணைந்து வரப்போகின்றார்கள் என்கின்றனர். அதைவிட கட்சியை பதிவு செய்யுங்கள். டீ.என்.ஏ ஐ பதிவு செய்யுங்கள் என பல தடவைகள் ஈ.பி.ஆர்.எல்.எப் கூறிய பொழுதிலும் கடைசியில் ஈ.பி.ஆர்.எல்.எப் ஐ பலவந்தமாக அவர்கள் வெளியேற்றுவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்து சுரேஸ் பிரேமச்சந்திரனை வெளியேற்றினார்கள்.பின்னர்சிவசக்தி ஆனந்தனை வெளியேற்றினார்கள். இப்படி வெளியேற்றி அதிலும் வெற்றிகண்டார்கள். இதன் முக்கியமான பின்னணியில் மகிந்த ராஜபக்ச அரசாங்கமும் தற்பொழுதிருக்கும் ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கமும் மிக கச்சிதமாக செயற்பட்டிருக்கின்றது என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அவர்களுடைய நோக்கம் என்பது கட்சிகளை பிளவுபடுத்துவது தான். கட்சிகளை பிளவுபடுத்தினால் மட்டும் தான் அவர்கள் தென்னிலங்கையில் தமது அரசியலை செய்ய முடியும் என்பதை அவர்கள் திடமாக நம்பியிருக்கின்றார்கள். காலத்திற்கு காலம் அவர்களுக்கு பிரச்சினை வரும் என்பதற்காக தமிழ் மக்களை பகடைக்காய்களாக பயன்படுத்தினார்களே தவிர, ஒரு போதும் இவர்கள் தனியாக நின்று எதிலுமே வெற்றிபெறவில்லை.

எனவே தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டிற்குள்ளே களமிறங்கியிருக்கும் கட்சிகள் தொடர்ந்தும் இதே உத்வேகத்துடன் செயற்பட வேண்டும். இதில் கூடுதலாக சருக்கி செல்பவர் செல்வம் அடைக்கலநாதனாகத் தான் இருக்கின்றார். செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகிய மூவரும் உறுதியாக இருக்கின்ற பொழுது மட்டுமே தமிழரசுக் கட்சியினுடைய நகர்வுகள் நத்தை வேகத்தில் நகர்த்தப்படுமே தவிர மற்றும்படி இவர்களும் தனித்தனியாக உடைந்து செயற்படுவார்களாக இருந்தால் தமிழ் மக்களின் இலக்கிற்காக போரிட்ட போராட்டம் உட்பட அனைத்து தியாகங்களும் ஒரு தோல்வியில் முடிவடையும். ஜனநாயக போராளிகள் புலனாய்வாளர்கள், ரெலோ புலனாய்வாளர்கள், புளொட் புலனாய்வாளர்கள், ஈ.பி.டீ.பி புலனாய்வாளர்கள், புனர்வாழ்வழிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் புலனாய் வாளர்கள் அனைவருமே இன்று புலனாய்வாளர்களாக இருக்கின்றார்கள். இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தமிழர் விடுதலை கூட்டணியும் தான் புலனாய்வு பின்னணியில் செயற்படாதவர்களாக இருப்பதாக தான் காட்டப்படுகின்றது. ஒருவேளை தமிழ் தேசிய மக்கள் முன்னணி அல்லது தமிழர் விடுதலை கூட்டணி, தமிழரசுக் கட்சி ஆகிய மூன்றும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் காலப்போக்கில் உருவாகலாம் அல்லது உருவாகாமல் போகலாம். ஆனாலும் இந்த மூன்று கட்சிகளுமே தற்பொழுது ஆயுதம் தாங்கிய கட்சிகளை துரோகிகள் என குறிப்பிட்டுக்கொண்டிருக்கின்றன. அதிலும்துரோகிகள் இருக்கின்றார்கள் தான் இல்லையென்று இல்லை. ஆனால் விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் இந்த நாட்டில் பயங்கரவாத தடைச்சட்டம் தற்பொழுது அமுலில் இருக்கின்றது. அமுலில் இருக்கின்ற இந்த நிலையிலே ஒரு விடுதலைப்புலிகள் சார்பாக ஒரு அமைப்பு இயங்குமாக இருந்தால் அவர்களை துரோகிகள் என பலரதும் பார்வையில் இருக்கின்ற இந்த கட்டத்தில் இவர்கள் எப்படி இயங்குவார்கள் என்பது ஒரு கேள்விக்குறியாகத்தான் அவர்கள் அந்த கருத்தை தெரிவித்திருக்கின்றார்கள். இன்று இராணுவம் புலனாய்வு எல்லாமே விடுதலைப்புலிகளை உள்வாங்கி தமது வழிநடத்தல் வேண்டும் என முயற்சிக்கின்றார்கள். இதிலே இல்லை நாங்கள் தாயகம் தேசியம் சுயநிர்ணயஉரிமைபோன்றவற்றிற்காக தொடர்ந்தும் நாங்கள் போராடுவோம் என்று பல போராளிகள் இன்றும் தங்களை தியாகம் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே இந்த போராளிகளை நீங்கள் அதற்குள் உள்வாங்காவிட்டால் பரவாயில்லை ஆனால் அவர்களை இழிவுபடுத்துகின்ற அல்லது கொச்சைப்படுத்துகின்ற செயற்பாடுகளை இந்த கட்சிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். நடைபெற்ற அந்த கட்சிகளினது ஒருங்கிணைப்பின் பொழுதும் ஜனநாயக போராளி கட்சிகளை உள்வாங்க தவறுகின்ற முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் சுட்டிக்காட்டியதன் ஊடாக பாரிய சர்ச்சை உருவாகியிருக்கின்றது.

எனவே இது நடக்கும் ஏனென்றால் குறிப்பாக ஜனாதிபதியின் திட்டம் இந்த கட்சிகளை சின்னாபின்னமாக்கி சிதைப்பதேயாகும். அதற்கு தற்பொழுது தமிழரசுக் கட்சியில் உள்ள வந்தேறிகள் அடிவருடிகளாக தற்பொழுது செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார் கள். இவர்கள் உண்மையிலே உள்ளூராட்சி மன்றங்களை தற்பொழுது சிஸ்டம் சேஞ்ஜ் என்று கூறி இவர்கள் தற்பொழுது தனியாக இருக்கின்றார்கள். இதிலே தோல்வியுற்றார்களாக இருந்தால் நிச்சயம் தமிழ் மக்கள் இவர்களை பாதணியால் அடித்து கொல்லும் ஒரு நிலை இந்த நாட்டில் உருவாக்கப்படும். எனவே அதற்கு முன்னர் சகல ஒருங்கிணைப்புகளும் சரியாக செய்து தமிழ் இனத்தை காப்பாற்றுவதற்கு தமிழ் தரப்புக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாக இருக்கின்றது.



# நல்லிணக்கப் பொறிமுறை தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுக்கொடுக்குமா?



**கடந்தவார தொடர்ச்சி...**

பல்வேறு ஆயுதக் குழுக்களைச் சேர்ந்த போராளிகள், கலந்தாலோசனையில் 'பாதிக்கப்பட்டவர்கள்' தொடர்பாக உயர் அளவில் கவனஞ் செலுத்தப்பட்டிருந்தமை குறித்து எதிர்வினையாற்றியிருந்தார்கள். ஒரு இராணுவ உத்தியோகத்தர் இது "பெருமளவுக்கு பாதிக்கப்பட்டவர்களை மையமாக கொண்டுள்ளது அது அவ்வாறிருத்தல் வேண்டும். ஆனால், எம்மைப் பற்றி ஒன்றுமில்லையே?" எனக் கேட்டார். தனிநபர் படுகொலைகளையும் உள்ளடக்கிய விதத்தில் திட்டவட்டமான சம்பவங்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என ஒரு சில சமர்ப்பணங்களில் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், மற்றும் சில சமர்ப்பணங்கள் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை மற்றும் சிறுவர் ஆட்சேர்ப்பு போன்ற திட்டவட்டமான அத்துமீறல் வகைகள் குறித்து கண்டறியப்பட வேண்டும் என யோசனை தெரிவித்திருந்தன. அதே வேளையில், வேறு சில சமர்ப்பணங்கள் மலையகத் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்று வரும் கட்டமைப்பு ரீதியான வன்முறை மற்றும் பாரபட்சம் போன்ற செயல்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டிருந்தன.

ஓர் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை வடிவமைக்க விரும்புபவர்கள், அத்தகைய ஒரு பொறிமுறையுடன் சம்பந்தப்படாத விதத்தில் உண்மையை கண்டறிவதற்கான கோரிக்கை இருந்து வருகின்றது என்ற தடுமாற்ற நிலையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான விமர்சனங்களை அலட்சியம் செய்யவதற்குப் பதிலாக, அந்த விடயங்களை கவனத்தில் எடுப்பதற்கு அவர்கள் முயற்சிக்க வேண்டும். குறிப்பாக (நான் பணியாற்றிய காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தையும் உள்ளடக்கிய விதத்தில்) இதுவரையில் உண்மைய பெற்றுக்கொடுக்க முடியாதிருக்கும் நிலையும், கடந்த தசப்தங்களின் போது அரசினால் சேகரிக்கப்பட்டிருக்கும் பெருந்தொகையான சான்றுகள் மற்றும் ஆவணங்கள் என்பனவும், ஏற்கனவே அரசு வசம் இருந்து வரும் தகவல்களை ஒன்றாக தொகுப்பதற்குப் பதிலாக, மற்றொரு ஆணைக்குழுவுக் கூடாக பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து தகவல்கள் கேசரிக்கப்பட வேண்டுமா என்ற பாரதூரமான கேள்வி எழுகின்றது.

ஓர் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவதற்கான திட்டவட்டமான சட்டவாக்கம், விசாரணை ஆணைக்குழுக்களிடமிருந்து கணிசமான அளவில் வேறுபட்டதாக இருந்து வர முடியும். எனினும், விசாரணை ஆணைக்குழுக்கள் எவ்வாறு செயற்பட்டு வந்துள்ளன, அவை எதிர்கொண்ட இடையூறுகள் எவை என்பன குறித்த கவனமான ஓர் ஆய்வு, தகவல்களை சேகரிப்பதிலும், விசாரணைகளை நடத்துவதிலும் நிலவி வரும் திட்டவட்டமான இடைவெளிகளை எடுத்துக் காட்ட முடியும். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டத்தை தயாரிப்பவர்கள் அந்த இடைவெளிகளை கவனத்தில் எடுப்பது அவசியமாகும். அந்த விதத்தில் குறிப்பாக விசாரணை நடத்தும் அதிகாரம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு இணையான விதத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அதன் பரிந்துரைகளை அமுல் செய்வதற்கான திட்டம் என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் செயன்முறையின் ஒட்டுமொத்த வடிவமைப்பை நோக்கும் போது அது குறித்து ஆழமாக சிந்தித்து, திட்டங்களை உருவாக்க வேண்டியுள்ளது என்ற விடயத்தை அறிய முடிகின்றது. முன்னைய விசாரணை ஆணைக்குழுக்களின் அனுபவத்திலிருந்து கிடைக்கும் முக்கியமான ஒரு பாடம், பாதிக்கப்பட்டவர்களினால் வழங்கப்பட்டிருக்கும் சான்று முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றின் பலம் என்னவாக இருந்த போதிலும், அவற்றை அமுல் செய்வதற்கான அரசியல் விருப்பு குறைவாக இருந்து வருகின்றது என்பதாகும். எனவே, தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார கொந்தளிப்புச் சூழ்நிலையில், ஓர் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பது தவிர அரசாங்கம் உண்மையில் வேறு சில விடயங்கள் தொடர்பாகவும் தன்னை அரப்பணித்துக் கொண்டுள்ளது. இந்தப் பின்னணியில், அவ்விதம் அமைக்கப்படும் ஆணைக்குழு இறுதியில் அதனை உருவாக்கிய அரசாங்கத்திடம் தனது கருத்துக்களை முன்வைப்பதற்கு போராட வேண்டி நேரிட முடியும்.

## கலந்தாலோசனைகளின் குறியீட்டு ரீதியான மதிப்பு மற்றும் உண்மையான மதிப்பு

எனவே, யாருக்காக இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கப்படுகின்றது? வெறுமனே சர்வதேச அழுத்தங்களை சமாதானப்படுத்தும் நோக்கத்துடன் அவை உருவாக்கப்படுவதாக இருந்தால் அத்தகைய ஆணைக்குழுக்களை ஸ்தாபிப்பது அவ்வளவு சிரமமான காரியமாக இருக்கமாட்டாது: ஏனைய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்களின் அம்சங்களை இரவல் வாங்கி, ஒரு பிரேரணையை தயாரிக்கும் பணியை சட்டத்தரணிகளை குழுவொன்றிடம் ஒப்படைக்க முடியும். உள்நாட்டு சட்ட நடைமுறைகளுடன் இணைந்த விதத்தில் அவர்கள் அந்த பிரேரணையை தயாரித்து, அவசர அவசரமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ள முடியும். அதனையடுத்து அரசுக்கு விசுவாசமான தனிநபர்களின் குழு ஒன்றை நியமனம் செய்ய முடியும். எவ்வாறிருப்பினும், இது கடந்த காலத் தவறுகள் மற்றும் தோல்விகள் என்பவற்றை மீண்டும் எடுத்து வருவதற்கான ஒரு வகை மாதிரியாகவே இருந்து வரும்.

எனினும், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை அமைப்பதன் அபிலாசை விசாரணை ஆணைக்குழுக்கள் தொடர்பான இலங்கைக்கு மீண்டும் மீண்டும் நிகழ்த்திய பரீட்சார்த்தங்களிலிருந்து கற்றுக் கொள்வதும், பெருமளவுக்கு நேரடியாக பாதிக்கப்பட்டவர்களுடைய பிரச்சினைகளுக்கு எதிர்வினையாற்றுவதும், வேதனை மிகுந்த கடந்த காலத்தை சமாளிக்கக்கூடிய ஒரு செயன்முறையை உருவாக்குவதும், நியாயமான ஒரு நாட்டை கட்டியெழுப்பும் பொருட்டு இவற்றை தீர்த்து வைப்பதற்கான வழிமுறைகளுக்கு தன்னை அர்பணித்துக் கொள்வதும் இதன் அபிலாசையாக இருந்து வந்தால் அதற்கு வேறுபட்ட ஒரு பாதையே தேவைப்படுகின்றது. இத்தகைய ஆணைக்குழு ஒன்றை வடிவமைக்கும் செயன்முறை பொது மக்கள் குறிப்பாக பாதிக்கப்பட்டவர்கள் அந்தப் பொறிமுறையை அணுகி, அதனுடன் எவ்வாறு செயற்படுவார்கள் என்ற விடயத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும். இது தொடர்பாக கலந்தாலோசனை அணுகுமுறை ஒன்றை உறுதிப்படுத்திக் கொள்வது தவிர்க்க முடியாததாகும். அவ்வாறு செய்வது எதிர்கால உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றுக்கு குறியீட்டு ரீதியான மதிப்பினையும், அசல் மதிப்பினையும் வழங்க முடியும். கலந்தாலோசனைச் செயலணி அறிக்கைகள் பாதிக்கப்பட்ட சமூகங்களின் அனுபவங்களின் அடிப்படையில் முக்கியமான கண்ணோட்டங்கள் மற்றும் திட்டவட்டமான யோசனைகள் என்பவற்றை வழங்கும் அதே வேளையில், இந்தக் கலந்தாலோசனைகள் இடம்பெற்று நீண்ட ஆறு ஆண்டுகள் கடந்து சென்றுள்ளன என்ற விடயத்தையும் நினைவுபடுத்திக் கொள்வது முக்கியமானதாகும்.

ஒரு சில நிலைமாறு கால நீதி வழிமுறைகள் அமுல் செய்யப்பட்ட போதிலும், அவை பொது மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றி வைக்கவில்லை. குறிப்பாக காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நேர்ந்த கதி தொடர்பாக மக்களுடைய எதிர்பார்ப்புக்களை அவை நிறைவேற்றி வைக்கவில்லை. குறிப்பாக நீதி தொடர்பான கடப்பாடுகளை பொறுத்த வரையில் கணிசமான அளவிலான குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எவையும் ஏற்பட்டிருக்கவில்லை. குறியீட்டு ரீதியான சம்பவங்கள் தொடர்பாக எத்தகைய முக்கியமான வெற்றிகளை ஈட்டத் தவறியிருப்பது, உள்நாட்டு முறைகளுக்கு ஊடாக நீதியை பெற்றுக்கொள்ள முடியும் என்ற விடயத்தில் பொதுமக்களின் நம்பிக்கையை சீர்குலைத்துள்ளது. உண்மை மற்றும் நல்லிக்கண ஆணைக்குழு குறித்த கருதுகோள் 2016ஆம் ஆண்டில் ஒரு நீதிப் பொறிமுறையையும் உள்ளடக்கிய விதத்தில் நான்கு பொறிமுறைகளில் ஒன்றாக முன்வைக்கப்பட்டிருந்தது. ஒரு நீதிப் பொறிமுறை இல்லாத உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, சர்வதேச சமூகம் மற்றும் இலங்கையின் பொது மக்கள் ஆகிய தரப்புக்களின் கவனத்தை திசை திருப்புவதற்கான இலங்கை அரசின் முயற்சிகளின் ஒரு பாகமாகவே நோக்கப்படுகின்றது.

இந்த உத்தேசப் பொறிமுறை சட்டபூர்வத் தன்மை, நம்பகத் தன்மை மற்றும் பொது மக்களின் நம்பிக்கை என்பவற்றை வெல்ல வேண்டுமானால் கலந்தாலோசனை மிக முக்கியமானதாகும். எவ்வாறிருப்பினும், கலந்தாலோசனைகள் வெறுமனே கண்துடைப்பு இயல்பிலான கலந்தாலோசனைகளாக இருந்து வரக் கூடாது. அவை கொழும்பு சிவில் சமூக ஆளுமைகளுடன் மட்டும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளாமல் நாடெங்கிலும் வாழ்ந்து வரும் சமூகத் தலைவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தக் கலந்தாலோசனைகள் ஓர் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு தேவை தானா என்ற கேள்விகளையும் உள்ளடக்கிய விதத்தில் கடினமான கேள்விகளை கவனத்தில் எடுப்பது அவசியமாகும். ஓர் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான தேவை தெளிவாக இருந்து வருகின்றது என அனுமானிப்பதற்குப் பதிலாக, உண்மையை கண்டறியும் விடயத்தில் ஓர் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வகிக்கக்கூடிய வகிபங்கினை மதிப்பிடுவதும், உண்மையை கண்டறியும் பாரிய செயன்முறைக்கு உதவுவதற்கென புறம்பாக எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகள் மற்றும் அதற்கு இணையான விதத்தில் எடுப்பட வேண்டிய வழிமுறைகள் மதிப்பிடுவதும் புத்திசாலித்தனமானதாக இருந்து வரும்.

**மிராக் ரஹீம்**

# தமிழரசு கட்சியில் உள்ளவர்கள் வந்தேறிகள்

## இவர்களே தமிழ் தேசிய கூட்டமைப்பை உடைத்தார்கள்

**முன்னாள் வடமாகாணசபை விவசாய அமைச்சர் க.சிவநேசன் (பவான்) அவர்களுடனான சிறப்பு நேர்காணல்**



கடந்தவார தொடர்ச்சி..

**கேள்வி : இத்தகைய சூழ்நிலையில் ஆயுதம் தாங்கிய கட்சிகள் துரோகிகள் என்ற பட்டம் இருக்கின்றது தானே அதாவது இலங்கையில் உள்ள தமிழரசுக் கட்சி கூறுகின்றது தமிழர் விடுதலைக் கூட்டணி கூறுகின்றது மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கூறுகின்றது. ஏன் அவ்வாறான ஒரு கருத்தை தேர்தல் ரீதியான பிரச்சாரங்களிலே கூறுகின்றார்கள்?**

பதில் : தற்பொழுது இயக்கங்கள் துரோகிகள் என்று கூறும் நீங்கள் ஆரம்ப காலத்தில் விடுதலைப்புலிகளால் அமிர்தலிங்கம் உட்பட பல தலைவர்கள் கொல்லப்பட்டபொழுது துரோகிகள் என்று தான் கொன்றவர்கள். விடுதலைப்புலிகளின் கொள்கைகளை ஏற்றுத்தான் நீங்கள் இறுதியாக டீ.என்.ஏ இல் சேர்ந்தனீர்கள். அமிர்தலிங்கம் கொலை செய்யப்பட்டதன் பின்னர் அந்த கட்சியை தலைமையாக கொண்ட நீங்கள் தமிழரசுக் கட்சி அமிர்தலிங்கத்தை துரோகி என்று சொல்லப்பட்டு கொலை செய்யப்பட்டதன் பின்னர் அதே விடுதலைப்புலிகளின் அணியில் போய் சேர்ந்து தானே நீங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கினீர்கள். எனவே தற்பொழுது நீங்கள் ஏன் சொல்லுகின்றீர்கள் ஏன் அப்பொழுது சொல்லவில்லை. ஆயுத கட்சிகளுக்கு பயம். ஆகவே நாங்கள் திரும்ப ஆயுதம் தூக்கினால் நீங்கள் பயந்து மாறி சொல்லுவீர்களோ. அப்படியென்றால் அது தான் அவர்களின் நோக்கமா?

**கேள்வி : அதற்கு காலங்கள் தான் பதில் சொல்ல வேண்டும்.**

பதில் : அவர்களை பொறுத்தவரையில் இதுவொரு சரியான காரணம் இல்லை.

**கேள்வி : கட்சித் தலைமை என்பது சித்தார்த்தன் தலைமையில், சுரேஸ் பிரேமச்சந்திரன் விக்னேஸ்வரன் அவர்கள் கூட தமிழரசுக்கட்சியில் வந்தேறிகளாக கருத்துக்களை முன்வைத்தவர்களுக்கு எடுத்துக்கூறவில்லையா? இப்படி செய்வது தவறு. இதனை நீங்கள் மாற்றியமைக்க வேண்டும் என்ற ஒரு கருத்தை நீங்கள் எடுத்துக்கூறியிருக்கலாம் தானே?**

பதில் : இல்லை. தேசியத்தை பலவீனப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் வந்தவர்களுக்கு எதை எடுத்துக் கூறுவது. தவறை கூறினால் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா? அவர்கள் தவறு செய்வதற்கு என்றே வந்திருக்கின்றார்கள். பின்னர் அதை தவறு என்று சொன்னால் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களோ. சம்பந்தன் ஐயா அவர்களை பொறுத்தவரையிலே நான் அவரை பிழையாக கருத்து சொல்லவில்லை அவரது தற்போதைய வயதும் அவரது உடல் நிலையும் அவர் கௌரவமாக இளைய தலைமுறையிடம் தனது பொறுப்பை கொடுத்து விட்டு ஒரு ஆலோசகராக ஒதுங்கியிருந்து கூற வேண்டிய காலகட்டம் இது. எனவே அவரைப் பற்றி நாங்கள் இங்கு கதைப்பது ஒரு அர்த்தமற்ற விடயம். இதை அவர் செய்ய வேண்டும் என்பது என்னுடைய மனப்பூர்வமான வேண்டுகோள் அவ்வளவும் தான். ஒரு மனிதன் சுயமாக செயற்படவேண்டும் என்றால் அதற்கு குறிப்பிட்ட வயது இருக்கின்றது. ஆனால் அவர் 86 வயதையும் தாண்டி 90 வயதை நோக்கி சென்று கொண்டிருக்கும் பொழுது இதுவொரு சென்சிடிவ்வான பிரச்சினை. இன்று உலகத்தையே ஆட்டிப்படைத்த பல இயந்திரங்களினால் உருவாக்கப்பட்டு அதனை கொள்கையாக கொண்டு வரும் விடயத்தை இந்த வயதில் நான் சமாளிப்பேன் என நிற்பது உண்மையாக கடினமானதொன்று. நாங்கள் அவரின் வயதின் முதிர்ச்சியை மதித்து தான் கருத்து சொல்ல வேண்டும். ஆனால் உண்மையில் தற்பொழுது அவர் போக வேண்டிய இடம் அது. எனவே இன்று தமிழரசுக் கட்சிக்குள் இருக்கும் வந்தேறிகள் அவரை வைத்துக்கொண்டு தங்களை வைத்துக்கொண்டால் தான் தங்களது எண்ணங்களை நிறைவேற்ற முடியும் என்று செயற்பட்டுக்கொண்டிருப்பதால் அவர் அப்படி இருக்கின்றார். அல்லது நிச்சயமாக அவர் அந்த நிலைமைக்கு வந்திருக்கமாட்டார். என்னுடைய அவதானிப்பில் இருந்து நான் கருதுகின்ற விடயம் இது தான். அதாவது வந்தேறிகளினது செயற்பாட்டினால் தான் வேறு வழியில்லாமல் அவரும் தொடர்ந்தும் இருக்கவேண்டிய ஒரு சூழல் இருக்கின்றது. இது தேர்தல் கூட்டுக்காக தேர்தலை மையமாக கொண்டு தங்களது பதவிக்காக இருக்கின்றவர்கள் இருக்கின்றார்கள்.

எனக்கு இன்னுமொரு சந்தேகம் இருக்கின்றது அதாவது டெக்னிக்கல் ரீசன் என்னும் பொழுது கடந்த யாழ்ப்பாண தேர்தலில் பாரிய கருத்து ஒன்று வெளி வந்தது சுமந்திரன் மிக குறைவான வாக்குகளை பெற்று அவர் இன்று பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார். எனவே அவர் பாராளுமன்ற உறுப்பினராக வருவதற்கான வாக்கு காணாது என்னும் கருத்து பலமாக அடிபட்டது. அப்படியெனில் சுமந்திரன் சொல்லும் டெக்னிக்கல் ரீசன் குறைந்தளவு வாக்கை எடுத்துவிட்டு ஆட்சி அமைப்பது எப்படி அல்லது பாராளுமன்ற உறுப்பினராக வருவது எப்படி என்ற டெக்னிக்கலை சுமந்திரன் வைத்திருக்கின்றாரோ எனக்கு தெரியவில்லை.

**கேள்வி : அப்படியெனில் பாராளுமன்ற தேர்தலிலே திருட்டு வாக்குகளின் மூலம் சுமந்திரன் வந்தார் என்று கூறுகின்றீர்களா?**

பதில் : நான் அவ்வாறு சொல்லவில்லை. அந்த டெக்னிக்கல் என்பதில் எனக்கு சந்தேகம் இருக்கின்றது. ஏனென்றால் அதற்கு சரியான விளக்கம் கொடுக்கவில்லை தானே. அப்படி ஒரு டெக்னிக்கல் இருக்கின்றதோ எனக்கு தெரியவில்லை. வாக்கு எடுக்காவிட்டாலும் என்னவென்றால் 68 வீதமான வாக்குகளை எடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்பொழுது 32இல் இருக்கின்றது. எனவே இது மேலும் பிரிந்தால் ஆளுக்கு 10, 12 தான் வரும். எனவே இந்த 10, 12 வீதமான வாக்குகளை எடுப்பவர் டெக்னிக்கலாக ஆட்சி அமைக்கும் அளவிற்கு வரமுடியும் என்று சொன்னால் சுமந்திரன் ஏதோவொரு டெக்னிக்கல் வைத்திருக்கின்றார் போல் இருக்கின்றது. அதை வெளிப்படையாகவும் சொல்லவில்லை தானே. இதில் எனக்கு ஒரு சந்தேகம் இருக்கின்றது இது உண்மை தானா என்பதில்.

**கேள்வி : அவர் அவ்வாறு செயற்படுகின்றார் என்றால் தற்பொழுது நீங்கள் எடுத்திருக்கக்கூடிய முடிவுகள் என்ன அல்லது எப்படி போகலாம் என்பது உங்களது உத்தி?**

பதில் : என்னைப் பொறுத்தவரையில் கட்சிகள் தாங்கள் தாங்கள் கொண்டிருக்கும் யாப்புக்களை முதலில் எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும். நாங்கள் என்ன கட்சிகள் என்ன யாப்பைக் கொண்டிருக்கின்றோம் என அறிந்திருக்க வேண்டும். வந்தேறிகளுக்கு யாப்பு தெரியும் என்று சொல்ல முடியாது தானே அதாவது போன வருடம் ஈ.பி.ஆர்.எல்.எப் இன் யாப்பில் இருந்தவர்கள் அதற்கு முதல் வருடம் புளொட் யாப்பில் இருந்தவர்கள். ஆகவே அப்படி யாப்புக்களை மாற்றி மாற்றி கொண்டுவந்தவர்கள் தங்களது யாப்பு என்ன என்று தெரியாமல் இருக்கின்றது. தமிழரசுக் கட்சிக்கு போனதும் முதலில் என்ன செய்ய வேண்டும் அவர்கள் தங்களது கட்சியிலுள்ள யாப்பை வாசிக்கவேண்டும். அதில் என்ன இருக்கின்றது என்பதை பார்க்கவேண்டும் அதன் பின்பு தான் அதில் இணைவதைப் பற்றி சிந்திக்க வேண்டும். அப்படியில்லைதானே. இவர்கள் புளொட்டில் இருப்பார்கள் அதில் வேற யாப்பு இருக்கின்றது. தமிழரசுக் கட்சிக்கு என்று இன்னுமொரு யாப்பு இருக்கின்றது. அதே போன்று ஈ.பி.ஆர்.எல்.எப் இன் யாப்பு வேறு. எனவே நாங்கள் இது எல்லாவற்றையும் ஒருங்கிணைக்கும் பொழுது இவற்றில் எது எல்லாம் சரியாக ஒருங்கிணைகின்றது என்று பார்த்து பேசிப் பழகி தான் கூட்டுக்கள் வருகின்றது. ஆனால் இவர்களை பொறுத்தவரையில் தமிழரசுக் கட்சியில் இருக்கின்ற யாப்பிலுள்ள விடயங்களை சரியாக பார்க்காமல் தேர்தல் தான் ஒரேயொரு நோக்கம் என்று செயற்படுவது தான் இன்று இருக்கின்ற தமிழ் தேசியத்திற்குள் ஒற்றுமைப்பட முடியாது இருப்பதற்கு முக்கிய காரணம்.

**கேள்வி : தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்மந்தன் அவர்கள் விடுதலைப்புலிகள் தான் தமிழ் மக்களின் விடிவிற்காக செயற்பட்டார்கள் அதில் மாற்றுக்கருத்தில்லை அவர்கள் பலமான இயக்கமாக இருந்து பின்னர் அவர்களுக்கு ஏற்பட்ட பின்னடைவுகள் காரணமாக அவர்களது போராட்டம் மௌனிக் கப்பட்ட நிலையில் தற்பொழுது அருவி சென்றுகொண்டிருக்கின்றது என்றவொரு விடயத்தை கூறியிருக்கின்றார். அப்படி இருக்கின்ற பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பை இவர்கள் பிளவுபடுத்துவதற்காக ஒரு அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலிலே வந்தேறிகள் செயற்பட்டார்கள் அப்படித்தானே?**

பதில் : இதில் அரசாங்கத்தின் பேரினவாதத்தினுடைய நிகழ்ச்சி நிரலுக்கு கீழே தான் இவையெல்லாம் நடக்கின்றது என்று நாங்கள் சொல்வது எங்களுக்கு வெக்கக்கேடு. என்ன காரணம் என்றால் இதை அவர்கள் செய்தார்கள். கட்டாயம் செய்வார்கள் அவர்களை பொறுத்தவரையில் தமிழ் தேசியத்தை பலவீனப்படுத்த வேண்டும் என்பது அவர்களினது அஜந்தா. சிலவேளை பேரினவாத கட்சிகளினுடைய யாப்பிலும் அது இருக்கும். பலவீனப்படுத்தினால் தான் இந்த நாட்டில் சரியான அரசியல் இஸ்திர தன்மையை உருவாக்க முடியும் என்பது அவர்களது யாப்பில் இருக்கலாம். அது அவர்களது செயற்பாடு. அவர்கள் அதை செய்வார்கள். ஆனால் அதற்குள்ளே நாங்கள் போய் விழுவது தானே பிரச்சினை. அதாவது தூண்டிலில் இருக்கும் புலுவை நம்பி மீன் கௌவும். நாங்கள் தானே கவனமாக இருக்கவேண்டும். அதை அவர்கள் செய்து கொண்டு தான் இருப்பார்கள். நாங்கள் விழிப்புணர்வாகவும் எங்களது இறுக்கமான கொள்கைகளுடனும் நாங்கள் கொண்டிருக்கின்ற கொள்கைகளை பற்றுதியுடனும் அதாவது கொண்டிருக்கும் கொள்கைகள் என்னும் பொழுது ஒவ்வொரு கட்சிகளும் யாப்பை வரைந்து விட்டு அந்த யாப்பை விட்டுவிட்டு தான் ஒவ்வொருவரும் செயற்படுகின்றார்கள். இதை அநேகமாக நான் பார்த்திருக்கின்றேன். பெரும்பான்மையானோர் அந்த யாப்பை பார்ப்பதே இல்லை. ஆகவே அந்த யாப்பின் அடிப்படையில் செயற்பட்டுக்கொண்டு வருகின்ற விடயங்கள் என்று சொல்லும் பொழுது எந்தவொரு கட்சியும் தங்களது தேர்தலுடைய மிக முக்கிய விடயமாக நான் அறிந்தவரையில் தேர்தல் தான் முக்கிய விடயம் என்பதை தமிழ் தேசியத்திலுள்ள எந்தவொரு யாப்பிலும் வரைந்திருப்பதாக நான் அறியவில்லை.

**கேள்வி : நீங்கள் அரசியல் நீரோட்டத்தில் வந்ததன் பின்னர் மீண்டும் நீங்கள் தமிழரசுக் கட்சியினால் ஓரங்கட்டப்படும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போதைய தமிழ்க் கட்சிகளின் கூட்டு பற்றி?**

பதில் : ஓரங்கட்டப்படுவது என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை ஏனென்றால் அவர்களை ஓரங்கட்டும் அளவிற்கு நாங்கள் ஒரு அரசியல் வங்குரோத்து கிடையாது. ஆனால் கூட்டு என்பது நாங்கள் கூட்டை விட்டு வெளியேறிவில்லை அவர்கள் தான் வெளியேறியிருக்கின்றார்கள். நாங்கள் வெளியேறப்போகின்றோம் நீங்கள் முடிவெடுங்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள் வெளியேறியதனால் தான் விக்னேஸ்வரன், சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றவர்கள் திரும்ப கூட்டுக்குள் இணைவார்கள் என எதிர்பார்க்கப்பட்டபோதும், விக்னேஸ்வரன் அவர்கள் இன்று பிரிந்துபோயுள்ளார். கூட்டமைப்பில் ஒரு கட்சியே இன்று ஆட்சி செய்கின்றது. இன்னும் சில கட்சிகள் எதிர்காலத்தில் மாபெரும் கூட்டணியாக உருவெடுக்கவும் வாய்ப்புக்கள் இருக்கின்றது.

**கேள்வி : தமிழ் தேசிய மக்கள் முன்னணியை அழைப்பதாக ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஊடகம் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். அதனது நிலைப்பாடு என்ன?**

பதில் : தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமிழ் தேசியத்துடன் சேர்ந்து இணங்கி செயற்படலாம் என்றால் அது வரவேற்கக்கூடிய விடயம். அவர்கள் வந்து இணைவார்கள் என்றால் நாங்கள் நிச்சயமாக அவர்களை இணைத்துக்கொள்ள வேண்டும். நாங்கள் இணைப்பதில்லை எங்களுடன் இணைகின்றார்கள் அவர்களாக வந்து ஒரு கூட்டில் இணைகின்றார்கள் என்றால் அது வரவேற்கப்பட வேண்டியதொன்று.

**கேள்வி : முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற போராட்டம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதிலே தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் பலர் கலந்துகொண்டு கருத்துக்களை தெரிவித்திருக்கின்றார்கள். இது உங்களுக்கு எந்த வகையில் சாதகமாக அமையும் என்பது உங்களது கருத்து?**

பதில் : இல்லை இது சாதகம் என்பதை விட உண்மையாக தன் எழுச்சியாக தன்னுடைய மூன்று சகோதரர்களை மாவீரர்களாக யுத்தத்தில் இழந்த ஒரு கடைசி இளைஞன் அதுமட்டுமல்ல தந்தையார் கூட நாட்டுப்பற்றாளராக இழந்த ஒரு நிலையில் உள்ளவர் அவர் ஒரு சமூக சேவையாளர். ஆகவே அவர்களுக்கு கட்டாயம் ஒரு வலி இருக்கும். ஏனென்றால் தமிழ் தேசிய தரப்பில் இருக்கின்ற கட்சிகள் எல்லாம் பிரிவதும் தேர்தலுக்காக தங்களது கொள்கைகளை மாற்றிக்கொள்வதும் இணைந்து செயற்படாமல் இருப்பதும் அவர்களது ஆதங்கமாக இருக்கின்றது.

**தொடரும்...**

**நேர்காணல் : இரணியன்**

# உலக வலம்

## நியூசிலாந்து பிரதமர் இராஜினாமா



நியூசிலாந்து நாட்டின் பிரதமராக 2017-ம் ஆண்டு ஒக்டோபர் 26-ந் திகதி முதல் பதவி வகித்து வருபவர் ஜெசிந்தா ஆர்டர்ன் (வயது 42). இவர்தான் ஆளும் தொழிலாளர் கட்சியின் தலைவரும் ஆவார். 37 வயதில் ஜெசிந்தா, அந்த நாட்டின் பிரதமராக பதவி ஏற்றபோது, உலகின் மிக இளம் வயது பெண் பிரதமர் என்ற சிறப்பைப் பெற்றார். அதற்கு அடுத்த ஆண்டில் அவர் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தபோது, பதவிக்காலத்தில் குழந்தை பெற்றுக் கொண்ட இரண்டாவது உலகத்தலைவர் என்ற பெயரைப் பெற்றார்.

இவர் கொரோனா வைரஸ் பெருந்தொற்று காலத்திலும், கிறைஸ்ட் சர்ச் நகர் மசூதியில் நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவ காலத்திலும், நெருக்கடியான தருணங்களில் நாட்டை வழிநடத்திய தலைவர் ஆவார். இந்த நிலையை அவர் பச்சாதாபமாகக் கையாண்டு, அவர் ஒரு சர்வதேச அடையாளமாக மாறினார். ஆனால் சமீப காலத்தில் நடந்த கருத்துகணிப்புகளில் அவரது செல்வாக்கு மிக மோசமாக குறைந்திருப்பது அம்பலத்துக்கு வந்தது.

இந்த நிலையில் நேப்பியர் நகரில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது கண்களில் வழியத் தயாராக இருந்த கண்ணீரை அடக்கிக்கொண்டு தனது பதவி திடீர் இராஜினாமாவை அறிவித்தார். அப்போது அவர் கூறியதாவது, நான் எனது 6-வது ஆண்டு பதவிக்காலத்தில் நுழைகிறேன். இந்த ஆண்டுகளில் எல்லாம் நான் எனது முழுமையான அனைத்தையும் தந்துள்ளேன். நான் இந்தப் பிரதமர் பதவிக்கு வந்தது எனது பாக்கியம். ஆனால் இது ஒரு சவாலான பணி ஆகும். நான் தொழிலாளர் கட்சித்தலைவர் பதவியில் இருந்து (பிரதமர் பதவி) பெப்ரவரி 7-ந் திகதி விலகுகிறேன்.

நியூசிலாந்தில் ஒக்டோபர் 14-ந் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும். கோடை விடுமுறை காலத்தில் எனது எதிர்காலம் குறித்து கவனிக்க நேரம் எடுத்துக்கொள்கிறேன். அதுவரை நான் பதவியில் தொடரலாம் என்று நம்பினேன். துரதிஷ்டவசமாக அதை நான் செய்யவில்லை. அப்படி தொடர்ந்திருந்தால் அது நாட்டுக்கு அவமதிப்பாக அமைந்துவிடும். ஆனால் எம்.பி பதவியில் தொடருவேன். நாட்டை அமைதியான சூழலில் ஒரு பக்கமும், நெருக்கடியான தருணத்தில் மற்றொரு பக்கமும் வழி நடத்த வேண்டியதாயிற்று. பொதுத்தேர்தலில் தொழிலாளர் கட்சி வெற்றி பெறாது என்பதற்காக நான் பதவி விலகவில்லை. வெற்றி பெறும் என்றே நம்புகிறேன். ஆனால் அந்த சவாலை சந்திப்பதற்கு புதிய தோள்கள் தேவை என்று கருதுகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

## சீன பொருளாதார வளர்ச்சி 03 சதவீதமாக சரிவு

சீனாவில் உருவான கொரோனா வைரஸ் பெருந்தொற்று நோய், உலக பொருளாதார வளர்ச்சியை பாதித்தது. இதில் உலகின் 2-வது பெரிய பொருளாதார நாடான சீனாவும் தப்பவில்லை. அங்கு கடந்த 2022-ம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சி 3 சதவீத அளவுக்கு சுருங்கிப்போய் விட்டது.

இது கடந்த 50 ஆண்டுகளில் காணப்பட்டுள்ள 2-வது மோசமான பொருளாதார வளர்ச்சி ஆகும். 2022-ம் ஆண்டில் சீனாவின் மொத்த பொருளாதார மதிப்பு 17.94 டிரில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். இது அதிகாரப்பூர்வமான இலக்கான 5.5 சதவீதத்திற்கு குறைவு ஆகும். இந்த தகவலை சீனாவின் தேசிய புள்ளிவிபர அலுவலகம் வெளியிட்டுள்ளது. சீனாவின் பொருளாதார வளர்ச்சி மிக மோசமான சரிவைக் கண்டிருப்பதற்கு காரணம், அங்கு கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கு "ஜீரோ கோவிட் பொலிசி" என்ற பெயரில் கொண்டு வந்த கடுமையான கட்டுப்பாடுகளும், பொதுமுடக்கமும்தான். சீனாவில் 1974-ம் ஆண்டு மிகக்குறைந்த அளவாக 2.3 சதவீத பொருளாதார வளர்ச்சி காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## நேபாளத்தில் விமான விபத்தில் 72 பேர் உயிரிழப்பு

நேபாள தலைநகர் காத்மண்டுவில் இருந்து சுற்றுலா தலமான பொக்காராவுக்கு கடந்த 16 காலை 10.33 மணிக்கு "எட்டி ஏர்லைன்ஸ்" விமானம் புறப்பட்டு சென்றது. அதில் 68 பயணிகள் மற்றும் 4 விமான ஊழியர்கள் என மொத்தம் 72 பேர் பயணம் செய்தனர். அந்த விமானம் காலை 11 மணிக்கு பொக்காரா விமான நிலையத்தில் தரையிறங்க முயன்றது. பொக்காரா புதிய விமான நிலையம் கடந்த 01 ஆம் திகதி தான் திறந்து வைக்கப்பட்டது. விமான நிலையத்தில் தரை இறங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு விமானத்தில் திடீரென்று தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. அப்போது பழைய விமான நிலையத்துக்கும், புதிய விமான நிலையத்துக்கும் இடையே உள்ள சேட்டி நதிக்கரையில் விமானம் விழுந்து நொறுங்கியது. அந்த நேரத்தில் மோசமான வானிலையும் நிலவியது. இதற்கிடையே தரையில் விழுந்து நொறுங்கிய விமானம் திடீரென்று தீப்பிடித்து எரியத் தொடங்கியதால் அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## உக்ரைனில் ஹெலிகொப்டர் விபத்து

உக்ரைன் தலைநகர் கீவின் கிழக்கு புறநகர் பகுதியில் உள்ள மழலையர் பள்ளி அருகே ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதில் உக்ரைனின் உள்துறை அமைச்சர் உட்பட 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

உக்ரைனின் அவசர சேவைக்கு சொந்தமான இந்த ஹெலிகொப்டர் உள்துறை அமைச்சர் டெஸின் மொனஸ்டிர்ஸ்கி உட்பட 8 பேர் பயணம் செய்த நிலையில் விபத்துக்குள்ளானது.

மழலையர் பள்ளி அருகே ஹெலிகொப்டர் விழுந்ததில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 2 குழந்தைகளும் உயிரிழந்துள்ளனர். இவர்களை தவிர, 20க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மீட்கப்பட்ட நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் 10 பேர் குழந்தைகள் என தேசிய தலைமை காவலர் இஹோர் கிளிமென்கோ தெரிவித்துள்ளார்.



## 10 ஆயிரம் ஊழியர்கள் பணி நீக்கம் - மைக்ரோசொப்ட்

சமீபகாலமாக பல முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆட்குறைப்பு பணியில் ஈடுபட்டு ஊழியர்களை நீக்கி வந்தன. அந்த வகையில் மைக்ரோசொப்ட் நிறுவனம் 10 ஆயிரம் ஊழியர்களை நீக்கி உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. மனிதவளம் மற்றும் பொறியியல் பிரிவில் 10 ஆயிரம் ஊழியர்களை நீக்குகிறது. சுமார் 2.20 இலட்சம் ஊழியர்கள் பணியாற்றும் நிலையில் 5 சதவீத பேரை நீக்க வோஷிங்டனை மையமாக கொண்ட மைக்ரோசொப்ட் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

## உலக பொருளாதார வளர்ச்சி 1.7 சதவீதமாக குறையும் - உலக வங்கி




2023-ம் ஆண்டில் உலக பொருளாதார வளர்ச்சி 1.7 சதவீதமாக குறையும் என உலக வங்கி கணித்துள்ளது. இது கடந்த ஆண்டின் ஜூன் மாதத்தில் கணிக்கப்பட்ட 3 சதவீத வளர்ச்சி என்பதை விட குறைவாகும்.

மேலும் கடந்த 30 ஆண்டுகளில் 3-வது முறையாக உலக பொருளாதார வளர்ச்சி மிக குறைந்த அளவை எட்டியுள்ளது. கடும் பணவீக்கம், வட்டி விகித உயர்வு, முதலீடு குறைவு, ரஷ்யா-உக்ரைன் போரால் ஏற்பட்ட நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் உலக பொருளாதாரம் மெதுவாகவே வளர்ந்து வருவதாக உலக பொருளாதார வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக பொருளாதாரம் 2023 மற்றும் 2024-ம் ஆண்டுகளில் முறையே 1.7 மற்றும் 2.7 சதவீதமாக வளர்ச்சி அடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக காலநிலை மாற்றம் உள்ளிட்ட காரணிகளால் உலக பொருளாதாரத்திற்கு ஏற்படும் இடர்பாடுகளை களைவதற்கு மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

## ஜெர்மனி பாதுகாப்புத் துறை மந்திரி ராஜினாமா

உக்ரைன், ரஷ்யா இடையிலான போரில் அமெரிக்காவும், ஜெர்மனி உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளும் உக்ரைனுக்கு ஆதரவாக இருந்து வருகின்றன. அந்த நாடுகள் உக்ரைனுக்கு அதிகளவில் இராணுவ உதவிகளை வழங்கி வருகின்றன.

இதற்கிடையே, ஜெர்மனி இராணுவ பெண் மந்திரியான கிறிஸ்டின் லாம்ப்ரெக்ட் உக்ரைன் ராணுவ வீரர்களுக்கு 5 ஆயிரம் ஹெல்மெட்டுகளை வழங்குவதாக சமீபத்தில் அறிவித்தார்.

ரஷ்ய படைகளை எதிர்த்து சண்டையிட உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அதிநவீன ஆயுதங்களை வழங்கி வரும் நிலையில், உக்ரைன் வீரர்களுக்கு ஹெல்மெட் வழங்கும் ஜெர்மனி இராணுவ மந்திரியின் இந்த அறிவிப்பு கேலிக்குள்ளானது. சமூக வலைத்தளங்களில் பலரும் கிறிஸ்டின் லாம்ப்ரெக்ட்டை கேலி செய்து பதிவுகளை வெளியிட்டனர்.

இந்த சர்ச்சை அடங்குவதற்குள் புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது கிறிஸ்டின் லாம்ப்ரெக்ட் தனது மகனை ராணுவ ஹெலிகொப்டரில் அழைத்துச் சென்றது விமர்சனத்துக்கு உள்ளானது. இதையடுத்து, ஜெர்மனியின் ஆயுத படைகளை மேம்படுத்த தவறிவிட்டதாக கிறிஸ்டின் லாம்ப்ரெக்ட் மீது கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில், கிறிஸ்டின் லாம்ப்ரெக்ட் இராணுவ மந்திரி பதவியை ராஜினாமா செய்தார். தனது ராஜினாமா கடிதத்தை பிரதமர் ஒலாப் ஸ்கோல்சிடம் வழங்கியதாகவும், அவர் அதை ஏற்றுக்கொண்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.




























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 22.01.2023 அன்று வெளியிடப்பட்டது.